
# சுதந்திரதாகம்



# சுதந்திரதாகம்

## எழுச்சிநிகழ்வும் புகைப்படக் கண்காட்சியும்

01.08.'92 சனிக்கிழமை மாலை 7 மணி

இடம்: Samfunns Huset
Arbeidesamfunnets plass 1

## நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஈழம் எங்கள் நாடடா | -பாடல் |
| காணிநிலம் வேண்டும் | -சிறுவர் நாடகம் |
| கனவுமெய்ப்பட... | -நாட்டிய நாடகம் |
| பகை வீழும் பாரடி | -ஈழக் கும்மி |
| நாட்களைத்தின்று பெருத்தது காலம் | -கூத்துவடிவில் புலம்பெயர் வாழ்வு |
| மீன்பாடும்தேசம் | -நடனம் |
| எமக்கென்றோர் சிறுவெளி | -கவிதா நாடக மேடை நிகழ்வு |

புகைப்படக் கண்காட்சியில் 150ற்கும் மேற்பட்ட படங்கள் இடம்பெறும்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

ஒழுங்குகள்:
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
ஒஸ்லோ
நோர்வே

தமிழீழ விடுதலைப் புலிகள்
நோர்வேக் கிளை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலையும் உலக அரசியலும்



தமிழீழம் மலர்வதற்கான அகப், புறக் காரணிகள் அனைத்தும் பக்குவமடைந்து வருகின்றன. போராளிகள் உயர்ந்த மன உறுதியுடன் போரிட்டுவருகின்றனர். பொதுமக்களோ ஒன்றுபட்டு உழைத்துவருகின்றனர். புதிய அரசுக்குரிய அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுமானங்களும் நிலைநிறுத்தப்பட்டுவருகின்றன.

ஸ்ரீலங்கா அரசிடம் இராணுவ அடக்குமுறையைத் தவிர, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தீர்வு எதுவும் இல்லை என்பது துலாம்பரமாக வெளிப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு இணைப்பை ஆளுங்கட்சி எதிர்க்கும் என்பதும் தெளிவாகியுள்ளது. உதவி அரசாங்க பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேச சபைகளுக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்து, ஒற்றையாட்சியில் சிங்கள மேலாதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதே அரசின் நோக்கம் என்பதும் அதனை நிறைவேற்ற விடுதலைப்புலிகளை நிர்மூலம் ஆக்கவேண்டும் என்பதும் வெளிப்படையாகவே கூறப்பட்டுவருகின்றது. இந்நோக்கத்தை நிறைவேற்ற அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்டுவரும் ஏனைய தமிழ்க்குழுக்கள், தாம் அரசினால் குப்பைத் தொட்டியினுள் கழிவாக வீசப்படுவோம் என்பதையும் உணரத்தொடங்கியுள்ளன. தாயக நிலைமைகள், தனிநாட்டின் உருவாக்கத்திற்காக சாதகமாக மாறிவரும் வேளையில் சர்வதேச நிலைமைகளும் அதற்கு ஆதரவு செய்வனவாகவே உள்ளன

ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் தேசிய அரசுகளின் நிலஒருமைப்பாடு பேணப்பட வேண்டும், அதுவே அடி ஆதாரக் கொள்கை என்ற விடயம் தளர்ந்துவருகின்றது. வெளிநாட்டுப் படையெடுப்புக்கே அது பொருந்தும் என்றும், உள்நாட்டில் ஒரு தேசிய இனம் தனது தாயக பூமியைப் பிரித்துக்கொள்ளலாம் என்ற கருத்து முனைப்படைகிறது. அரசு, இறைமை ஆகியவற்றுக்கு புதிய வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. ஓர் அரசுக்குள் இன்னொரு புதிய அரசை உருவாக்கும் செயற்பாடு நடைபெற்றுவருவதோடு மாத்திரமல்லாமல், புதிய நாடுகள் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டும் வருகின்றன. குடியேற்றவாத நாடுகளிலிருந்து விடுதலை பெறும்பொருட்டு, ஒரு தேசமக்கள் தமது சுயநிர்ணய உரிமையை ஒரு முறையே பயன்படுத்தலாம் என்ற பசப்புவாதம் அகன்றுபோக அந்நாட்டிலுள்ள இன்னொரு தேசிய இனம் மீண்டும் அவ்வுரிமையைப் பயன்படுத்தலாம் என்ற நடைமுறை உருவாகி வருகின்றது. சர்வதேச சட்டங்களுள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல புதிய நடைமுறைகள் உருவாகிவருகின்றன.


தேசிய விடுதலைப்போராட்டங்கள் நடைபெறும இடங்களில், ஜனநாயகம், மனித உரிமைகள், சிறுபான்மையின் உரிமைகள், ஸ்திரத்தன்மை ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. ஆயுதப்போராட்டம் நடைபெறும் இடங்களில் ஜனநாயக உரிமைகளை முழுமையாகப் பேணமுடியாது என்பது உண்மை. மேலும், பெரும் எண்ணிக்கையிலான ஒரு தேசிய இனம், குறைந்த எண்ணிக்கையிலான ஒரு தேசிய இனத்தை நசுக்கும் போது பெரும்பான்மையினரின் கருத்தையே ஜனநாயகக் கருத்தாகக் கொள்ளமுடியாது. இலங்கையைப் பொறுத்தவரை தற்போதுள்ள அரசியல் யாப்பின் கீழ், நிரந்தரப் பெரும்பான்மையாக இருந்துகொண்டு சிங்களத் தேசிய இனம் மேலாதிக்கம் செலுத்த முயலுதலே பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. மனித உரிமைகள் அங்கீகரிக்கப்பட்ட அரசின் மீதும் அவ்வரசின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் இயக்கத்தின் மீதும் ஒரேதளத்தில் பிரயோகிக்கப்படும்போது தற்போதுள்ள நிலைமையைப் பேணவே (status quo) இது பயன்படுகிறது. ஆயினும் மனித உரிமைகளைப் பேணுவதற்குரிய அரசியற் கட்டுமானங்களை விடுவிக்கப்பட்ட பகுதிகளில், விடுதலை இயக்கம் ஏற்படுத்திச் செயற்படத் தொடங்குமானால், மனித உரிமை மீறல் குறித்து கண்டனம் எழுப்பும் சர்வதேச அமைப்புக்கள் இவற்றை நிவர்த்தி செய்ய உருவாக்கப்படும் அரச கட்டுமானங்களையும் அங்கீகரிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. புதிய நாடமைக்கப் போராட்டம் நடக்கும் பகுதிகளிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகள் புதிய அரசினுள்ளும், அதன் நில அமைப்பினுள்ளும் பேணப்படவேண்டுமென்றும் புதிய அரசின் உள்நாட்டுப்பிரச்சனையாக நோக்கப்பட வேண்டுமென்றும் நியதி ஏற்பட்டுவருகிறது. விடுதலை வேண்டும் இனத்திடையேயுள்ள சிறுபான்மையினரின் உரிமைகள் புதிய நாட்டின் உருவாக்கத்திற்கு நிபந்தனையாக விதிக்கப்படமுடியாது. ஸ்திரத்தன்மை பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமென வலியுறுத்தப்படுகிறது. ஒரு தேசிய இனத்தின் நியாயமான அடிப்படை உரிமைகள் நசுக்கப்படும்போதே ஒரு நாட்டினதோ பிராந்தியத்தினதோ உலகத்தினதோ ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுகிறது. ஓர் அரசியல் நிபுணர்: "ஒரு இந்தியாவோ பத்து இந்தியாவோ, பொருளாதார விஸ்தரிப்புக்கு ஸ்திரத்தன்மை அவசியம்" எனக் குறிப்பிட்டதுபோல உலகின் ஸ்திரத்தன்மைக்கு புதிய தேசிய அரசுகளை அங்கீகரிப்பதும் பின்னர் அவை சுயாதீனமாக ஒருங்கிணைந்துகொள்ள அனுமதிப்பதும் அவசியமாகின்றது.

எம்மக்களின்,
இளைஞர்களின்
இறந்த உடல்களின் மீதும்,
சாம்பல் மேடுகளின்
மீதும்,
ஏறி நின்று
உயர்த்திய கரங்களில்
துப்பாக்கிகளை
ஏற்தியபடி,
ஓங்கிய குரல்கள்
விண்ணதிர ஒலிக்க
உனது முகத்திலறைந்து
கூறுகின்றோம்:

"இங்கு எமக்கொரு
வாழ்வுண்டு;
எங்களிருப்பை
அங்கீகரிக்க மறுக்கும்
எல்லோருக்கும்
நாங்கள் எதிரிகளே!"

Tamileelam Archive

# இனப்பிரச்சனைக்கு அரசியற்தீர்வு சாத்தியமாகுமா?



இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற குரல்கள் பல திக்குகளிலிருந்தும் ஒலித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியே வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் மனித உரிமைகளை முறையாகப் பாதுகாப்பதற்கும் பல்வேறு முயற்சிகளை எடுத்துவருவதாக ஒரு மாயத்தோற்றத்தினை ஏற்படுத்திவரும் அதேவேளை தனது பாதுகாப்புப் படையினரை ஆள், ஆயுத ரீதியில் பலப்படுத்தும் பணியில் முழுமூச்சாக இறங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் ஸ்ரீலங்கா அரசு அரசியல், இராணுவ ரீதியிலான இரட்டைத் தந்திரக் கொள்கையை கடைப்பிடிக்க இருப்பதாக ஸ்ரீலங்காவின் கைத்தொழில் அமைச்சர் அண்மையில் அறிவித்திருந்தமை உண்மையானது அல்ல. இனப்பிரச்சனை ஆயுதம் ஏந்திய போராட்டமாக வளர்ந்து தீவிரமடைந்த காலங்களில் பதவியிலிருந்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் (1977-88 ஜே. ஆர் ஜெயவர்த்தனா, 1988 இலிருந்து பிரேமதாசா) அரசியல் தீர்வு என்பதனை தம் மீதான அழுத்தங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளவே பயன்படுத்திவருகின்றனர் என்பது கண்கூடு. உண்மையில் இவர்கள் அரசியல் தீர்வினைப் பற்றிப் பேசிக்கொண்டு இராணுவத் தீர்வை நோக்கிச் செயற்படுகின்றமையினையே எம்மால் அவதானிக்கமுடிகின்றது.

அதேவேளை, "ஒரு புறம் யுத்தத்தினைத் தீவிரப்படுத்திக்கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடாத்தி, புலிகள் மீது நெருக்குதல் போட்டு ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் என சிங்கள அரசு எண்ணுகின்றது. போரும் பேச்சும் என்ற இரட்டைவேட அணுகுமுறையினை எமது விடுதலை இயக்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தமிழீழ மண் மீது பெரும் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டு, தமிழ்மக்கள் பெருந்தொகையில் கொன்றுகுவிக்கப்பட்டால் நாம் திறந்துவைத்திருக்கும் சமாதானக் கதவு மூடப்பட்டுவிடும் என்பதனைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறவிரும்புகின்றேன்",[1] என தலைவர் பிரபாகரன் அறிவித்திருப்பது இவ் "இரட்டை" அணுகுமுறை தொடர்பான நெருக்குதலை ஸ்ரீலங்கா அரசிற்குக் கொடுத்துள்ளது. ஸ்ரீலங்காவின் அரசதலைவர்கள் அரசியல் தீர்வினைப் பற்றிப் பேசிக்கொண்டு இராணுவ நடவடிக்கையினைத் தீவிரப்படுத்துவதன் காரணம்தான் என்ன?

## அரசியல் தீர்வில் சிக்கல்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாண்பதில் உள்ள சிக்கல்கள் பல அரசியல் அறிஞர்களாலும் விவாதிக்கப்பட்டே வருகின்றது. "இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் என்பது ஒரு பிரச்சனைக்கு மட்டும் தீர்வுகாணுதல் அல்ல; இலங்கைத் தீவினது உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியிலான சகல அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளும் இனப்பிரச்சனையில் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. இந்தவகையில் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியுமென்றால் தான் இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாணலாம் என்பது தெளிவு. இவ்வாறான சகல பிரச்சனைகளுக்கும் ஜே. ஆரால் தீர்வு காணமுடியாது. எனவே இனப்பிரச்சனைக்கும் தீர்வினைக் காணமுடியாது" [2](1987 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இக் கூற்று அரச தலைவரை ஜே. ஆர்

1. அன்னை பூபதியின் மூன்றாவது ஆண்டுநினைவுநாள் (19.04.92) தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையிலிருந்து

2. இந்து மகா சமுத்திரமும் இலங்கையின் இனப்பிரச்சனையும் -ஆசிரியர்கள் உதயன் விஜயன். பக்கம் - 121

என விளித்தபோதும், அடிப்படையில் இது இன்றும் பொருத்தமானதே) என்ற கூற்று ஆழ்ந்த கவனத்திற்குரியது.


ஸ்ரீலங்கா அரசால் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றினை முன்வைக்கமுடியும் என்பதனை வரலாற்றின் அனுபவமும் விஞ்ஞானரீதியான எதிர்வுகூறல்களும் நிராகரிக்கின்றன.

இதேவேளை, பிரச்சினையினைத் தீர்க்கக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றினை விடுதலைப்புலிகள் முன்வைக்க வேண்டும் என்று ஒரு சிலர் கூறுவதும் காதுகளில் விழத்தான் செய்கின்றது. இவர்களுக்கு "தமிழரின் உரிமைக்ககாகப் போராடிவரும் விடுதலைப்புலிகளிடம் ஒரு தீர்வுத்திட்டம் இல்லாமலில்லை. தமிழீழத் தனியரசுதான் அத் தீர்வு. இந்தத் தீர்வினைச் சிங்கள ஆளம் வர்க்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அப்படியானால் மாற்றுத்தீர்வை முன்வைப்பது அவர்களது கடப்பாடு ஆகும். அப்படி வைக்கப்படும் மாற்றுத்தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதா என்பதனை விடுதலைப்புலிகள் பரிசீலனை செய்யத் தயார். இதுதான் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு"[3] என விடுதலைப்புலிகள் உறுதியாகப் பதிலளிக்கின்றனர். கூட்டாட்சி, சமஷ்டி போன்ற தீர்வுத் திட்டங்களை முன்வைக்கக் கூடிய நிலையில் ஸ்ரீலங்கா அரசு இல்லை. ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி முறைமையினைத் (Unitary State Stractur) தாண்டி எவ்வகையான தீர்வுத் திட்டங்களையும் முன்வைக்க முடியாதவர்களாகவே ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் உள்ளனர்.

ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள்கள் ஒரு சமஷ்டி அமைப்பினைக் கொண்ட திட்டத்தினை முன்வைக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாற்கூட, 'இலங்கையின் அரசியற்சூழ்நிலையில் ஒரு சமஷ்டி ஆட்சிமுறை தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வாக அமையமுடியாது. ஸ்ரீலங்கா அரச இயந்திரமானது, சிங்கள பௌத்த பீரோகிரசியாக (Beurocracy) ஆக இருப்பதனால் நிர்வாகரீதியாக சமஷ்டி முறையினை ஒரு போதும் செயற்படுத்தவிடாது'[4] என முன்வைக்கப்பட்ட கருத்தின்முன் சமஷ்டிமுறை கூட கேள்விக்குறியாகின்றது.

இத்தகையதோர் சிக்கல்மிகுந்த சூழலில் சிங்களபௌத்தத்திற்கு தலைமை தாங்கிநிற்கும் ஸ்ரீலங்கா அரசும் தமிழ்த்தேசிய இனத்திற்குத் தலைமை தாங்கிநிற்கும் விடுதலைப்புலிகளும் மனமொத்து ஒரு தீர்வுத்திட்டத்திற்குப் போகமுடியாதசூழலே நிலவுகின்றது. இதனால் இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது அழுத்தங்களினாலேயே (இராணுவ, சர்வதேச அழுத்தங்கள்) அடையப்படமுடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

சர்வதேச சமுகத்தினைப் பொறுத்தவரை, சமாதானமாக ஒரு தீர்வினைக் காணுமாறு



ஸ்ரீலங்கா அரசினையும் விடுதலைப்புலிகளையும் நிர்ப்பந்தித்தே வருகிறது. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை 1991ஆம் ஆண்டின் தை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்பு (Peace offencive) மூலமாக சர்வதேச அழுத்தங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டனர். ஆனால், ஸ்ரீலங்கா அரசு சமாதானத் தீர்வுத் திட்டத்தினை முன்வைக்கமுடியாததாக இருப்பதனால் சர்வதேச அழுத்தங்களைச்

---

3 'விடுதலைப் புலிகள்' -ஆசிரியர் தலையங்கம் 'பங்குனி-சித்திரை 1992'

4. பேராசிரியர் A.J. வில்சனின் கட்டுரையிலிருந்து July-85 —Tamil Times—

சமாளித்து, இராணுவ நடவடிக்கைகளைத் தொடர வெவ்வேறு தந்திரோபாயங்களை



பயன்படுத்தவேண்டியுள்ளது. அதனை ஸ்ரீலங்கா அரசும் மேற்கொண்டுவருகிறது.

## தெரிவுக்குழு

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதற்காக அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழு, 'நாட்டில் சமாதானத்தையும் அரசியல் ஸ்திரத் தன்மையையும் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை விதந்துரைப்பதற்கான இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு' [5] எனத் தன்னை அழைத்துக் கொண்டது.

இப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவே சர்வதேச அழுத்தங்களிலிருந்து தன்னை விடுவித்துககொள்ள ஸ்ரீலங்கா அரசு இறுதியாகப் பயன்படுத்திய தந்திரமாகும். இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன என்ற மாயத் தோற்றத்தினை வெளிப்படுத்திக்கொண்டே தமிழீழ மக்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்துகொண்டிருக்க இத்தெரிவுக்குழு வாய்ப்பளித்தது.

இன்று, தெரிவுக்குழுவுக்குள் எழுந்துள்ள சிக்கலகள், ஸ்ரீலங்காவின் பௌத்த சிங்கள சக்திகளின் ஆதிக்கத்தின் முன் தமிழர்களுக்கான சிறு சலுகைகளைக் கூட பேச்சுவார்த்தைகளில் பெறுவது கடினமானது என்பதைத்தான் உணர்த்துகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய ஒரு தீர்வுக்கு வரமுடியாத நிலையில் இன்று விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தி, தனது தீர்வுத் திட்டத்தினை விடுதலைப்புலிகள் ஏற்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க முயற்சிக்கின்றது.

ஆனால், இந்த அணுகுமுறை தோல்வியினையே தழுவும் என்பது நடைமுறை அனுபவத்திலிருந்து தெரியவருகின்றது. அப்படித் தோல்வியினைத் தழுவும்போது ஸ்ரீலங்கா அரசு என்ன செய்யலாம்?

"இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணமுடியாத தனது பலவீனத்தினை மறைக்க ஸ்ரீலங்கா அரசு இந்தியாவை பலி ஆடாகப் பயன்படுத்தும் அபாயம் உண்டு"[6] என இந்தியா விடுதலைப்புலிகள் மீது மேற்கொண்ட தடை தொடர்பாக இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தமையும் இச்சந்தர்ப்பத்தில் இங்கு கவனத்திற் கொள்ளக் கூடியது.

எது எப்படியிருந்தபோதும், ஒரு நியாயமான தீர்வுக்கு வரமுடியாத நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இருப்பதனால், இராணுவ ரீதியில் நசுக்கமுடியாத அளவுக்கு தமிழரின் தேசியப்படையான விடுதலைப்புலிகளின் பலம் பெற்றும் வரும் அரசியல் சூழலின் தொடர்ச்சி, வரலாற்றின் வளர்ச்சிப்போக்கில் தமிழர்களுக்கான தனிநாடு ஒன்றினை உருவாக்கிக் கொடுக்கும் வாய்ப்புக்களை நிறையவே கொண்டுள்ளது.



5. பாராளுமன்ற செயலாளர் நாயகம் எஸ். என் செனிவிரத்தினாவின் அறிவிப்பு- 20.11.91

6. தீ.ஸ். ஸீனராமாநிம- ஞரஒநதலிநலெ சஞ்சிகையில

# இந்திய வெளியுறவுக் கொள்கையும் தமிழீழத் தேசமும்

பழைய உலக ஒழுங்கின் பிரகாரம் வல்லரசுகள், குட்டிவல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் என்று உலகில் இராணுவ பலம் கொண்டிருந்த நாடுகள் தங்களது பலத்தைக் காட்டி மற்றைய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தன.

இதன் அடிப்படையில் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா தன்னை ஒரு பிராந்திய வல்லரசாகக் கருதி அயல் நாடுகளைத் தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கும் முறையில், அயல் நாடுகள் தொடர்பாக மேலாதிக்கவாதம் நிறைந்த ஒரு வெளிவிவகாரக் கொள்கையையும் வகுத்துச் செயற்படுத்திவருகின்றது. இதனால் அதனது அயல் நாடுகளிடமிருந்து இந்தியா எதிர்ப்பையும் வெறுப்பையும் சம்பாதித்துவைத்திருக்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் மொத்தம் 7 நாடுகள் உண்டு. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான் என்பவையே அவையாகும்.

இவற்றுள் அனேக அனைத்துநாடுகளும் இந்தியாவை வெறுப்புடனேயே பார்க்கின்றன.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை இங்குவாழும் இருவேறு தேசிய இனங்களும் இந்தியா தொடர்பாக, இரு வேறு நிலைப்பாட்டிலேயே இருந்துவந்தன.

சிங்கள தேசிய இனம் இந்தியாவை ஒரு ஆக்கிரமிப்புச் சக்தியாகவே மிக நீண்ட நெடுங்காலத்திலிருந்து கருதிவருகின்றது.

தமிழ்த்தேசிய இனம் மிக நீண்டகாலத்திலிருந்து இந்தியாவை ஒரு நேசசக்தியாகவே பார்த்துவந்தது.

ஆனால் இன்று, இந்திய இராஜதந்திரத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட பாரிய தவறுகளினால் இப்பிராந்தியத்திலேயே இந்தியாவின் ஒரேயொரு நேச சக்தியாகவிருந்த தமிழ்த்தேசிய இனத்தை இந்தியாவே தனது பகைமைச் சக்தியாக பிரகடனப்படுத்திவிட்டது.

தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்புக் கறையை அகற்றவேண்டிய இந்திய அரசு அவ்விதம் செய்யாது ஆக்கிரமிப்புக்குச் சமனாக இன்னுமொருபடி சென்று புலிகளியக்கத்தை சட்டபூர்வமாகத் தடைசெய்துள்ளது.

இத்தடைமூலம் தமிழீழத் தேசிய இனத்தை இந்தியா தனது நிரந்தர எதிரியாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

புலிகள் இயக்கம்தான் தமிழீழமக்களின் ஒரேயொரு போராட்டச்சக்தியென்பதும், அதுதான் இன்று தமிழீழத் தேசிய இனத்திற்குத் தலைமை தாங்கித் தமிழீழ மக்களின் தன்னாட்சியுரிமைப் போராட்டத்தை வழிநடாத்திச் செல்கின்றது என்பதும், உலகம் அறிந்த உண்மைகள்.

எனவே புலிகள் இயக்கத்தின் மீதான தடை என்பதன் அர்த்தம் தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு விதிக்கப்பட்ட தடையே என்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை. இது தொடர்பாக இந்தியா என்னவிதமான கட்டுக்கதைகளைச் சொன்னாலும், இந்தியாவின் கடந்தகால நடைமுறைகள் இதைத் துல்லியமாகக் காட்டும். புலிகளை அழித்துப் போராட்டத்தை ஒடுக்குவதிலேயே இந்தியா கண்ணுங்கருத்துமாக இருந்துவருகிறது.

தமிழீழ மக்களின் பூர்வீக எதிரியான சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து தமிழீழ மண்ணை ஆக்கிரமித்த இந்தியா, சுமார் இரண்டு வருடங்கள் தமிழீழத்தில் நடாத்திய அனர்த்தங்கள் - அழிவுகள் உலகறிந்த விடயங்கள்.

தமது நேசசக்தியான தமிழீழ மக்களுக்கு இழைத்த வரலாற்றுத் தவறை, அதனால் இந்தியா அடைந்த கறையை இல்லாதொழிக்கப் பாடுபடவேண்டிய இந்திய இராஜதந்திரிகள், அவ்விதம் விவேகமாகச் செயற்படாது தமிழீழத்தின் மீதான தமது ஆக்கிரமிப்புக்குத் தோல்விக்குக் காரணமான புலிகளியக்கம் மீதும் - அதன் தலைவர் பிரபாகரன் மீதும் ஆத்திரம் கொண்டு, பழிவாங்க அலைந்து திரிகின்றனர்.


இந்திய இராஜதந்திரிகளின் இந்த ஆத்திரத்திற்கும், பழிவாங்கும் உணர்வுக்கும் மூலகாரணமாக இருப்பது, அயல்நாடுகள் தொடர்பாக மேலாதிக்கப்போக்கு நிறைந்த இந்தியாவின

வெளிவிவகாரக் கொள்கைதான். இப் பழைய - காலத்திற்கொவ்வாத- வெளிவிவகாரக் கொள்கையின் உந்துதலாலேயே இந்தியா தமிழ்த் தேசிய இனத்தைப் பகைமையுணர்வுடன் அணுகுகின்றது.

அக் கொள்கையின் படி தமிழீழம், இந்திய தேசத்திற்கு அடங்கி ஒடுங்கி, இந்திய தேச நலனுக்குச் சேவகஞ்செய்திருக்கவேண்டும். அப்படித்தான்ல இந்திய ஆளும் வர்ககம் எதிர்பார்த்தது, எதிர்பார்க்கின்றது.

இன்று, மாறிவரும் உலகஒழுங்கின் பிரகாரம் உலகின் தேசிய இனங்கள் பல, தன்னாட்சியுரிமையைப் பெற்றபடி இருக்கின்றன. அவற்றிற்கு, முன்னைய வல்லரசுகளும், குட்டிவல்லரசுகளும் அங்கீகாரமளித்து வழிவிடுகின்றன. பல பிராந்திய வல்லரசுகளும் தமது உள்நாட்டு-வெளிநாட்டுக் கொள்கைகளை மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப மாற்றியமைத்துவருகின்றன.

இந்த யதார்த்தப் போக்கை இந்தியா உணர்ந்துகொள்ளவில்லையென்று கூறமுடியாது.




உலகவல்லரசுகளுடனான உறவை காலத்திற்கேற்ப அது மாற்றிக்கொண்டுவிட்டது. ஆனால், தனது பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளுடனான கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரத் தயங்குகின்றது.

தென்னாசியப் பிராந்தியம் தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் வேரோடியிருக்கும் மேலாதிக்கத்தையும் அதனால் எழும் பகைமையுணர்வையும், பழிவாங்கலையும் இந்தியா கைவிடவேண்டும்.

இல்லாவிடின், அயல்நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் மேலும் மேலும் மோசமடைவதைத் தடுக்க முடியாமல் போகும்.

இதற்கு நல்லதொரு பிந்திய உதாரணம், இதுவரை நேசசக்தியாகவிருந்த தமிழீழத் தேசிய இனத்தை இந்தியாவே அவசரப்பட்டு பகைமைச சக்தியாக பிரகடனப்படுத்தியதுதான்.

ஆனால், புலிகள் இயக்கமாகிய நாங்கள், எமது தாய்நாட்டின் நலனுக்காக-எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றவே- இரத்தஞ்சிந்தி, தியாகங்கள் புரிந்து போராடுகின்றோம்.

எமது மக்களின் இரத்தத்தையும் கண்ணீரையும் தனது தேசிய நலனுக்காக பயன்படுத்தவேண்டும் என்ற இறுமைத் தனத்தை இந்தியா கைவிடவேண்டும்.

ஆகவே, தமிழீழம் குறித்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான அணுகுமுறையில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என, நாங்கள் எதிர்பர்க்கின்றோம்.

ஏனெனில், தமிழீழ மக்கள் இந்தியாவின் நேசசக்தியென்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

-விடுதலைப்புலிகள், குரல் 30

# மாறிவரும் உலகும் தமிழீழ விடுதலையும்

சர்வதேச உலக அரசியற்செய்திகளை அவதானித்துவரும் எவரும் இன்று உலகின் பல பாகங்களில் இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிகழ்ந்துவரும் பாரிய மாற்றங்களை அறிவர். பல்வேறுபட்ட இன, மத, மொழி, கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட இனங்கள் தமது அரசியல் உரிமைகளுக்காக நடத்தும் போராட்டங்கள் புதிய நிலைமைகளை உலகில் தோற்றுவித்துள்ளன. ஒழுங்குக்கு உலகை இட்டுச் செல்லுகின்றன. இந்த இனங்களுக்கிடையிலான பிரச்சனைகள் உலக சமாதானத்திற்கும் சகவாழ்விற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது என்ற அச்சம் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை பேணப்படும் நாடுகளில் உணரப்படுகின்றது.

**ரஜீவன்**

பல்வேறு நாடுகளில் ஏற்பட்டுள்ள இவ் இனங்களிற்கிடையேயான முரண்பாட்டின் காரணமாக ஆயிரக்கணக்கில் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் இலட்சக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர். இத்தனை அனர்த்தங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் காரணமான இம் முரண்பாடுகளானவை பல்வேறு நாடுகளுக்கு இடைப்பட்டதல்ல என்பதும் இது அவ்வந் நாடுகளில் வாழும் இனத்தவர்களுக்கிடையேயான முரண்பாட்டின் நிமித்தமானது என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டியதாகும்.


கடந்த குறுகிய காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் சர்வதேச அரசியல் யதார்த்தத்திற்கும் சர்வதேச சட்டங்களுக்கமையவும் "உடைக்கப்படமுடியாத" சோவியத் கூட்டு உடைந்து சுயநிர்ணயத்தினதும் சமத்துவத்தினதும் கோட்பாட்டில் அமைந்த சுதந்திரமான பொதுநலவாய நாடுகள் தோற்றம்பெற்றன. இதேபோன்றே 1991 ஜூன் மாத இறுதிப்பகுதியில் பிரகடனப்படுத்தப்பட்ட குரோஷியா, ஸ்லோவேனியா, பொஸ்னியா தனியரசுகளானது ஐரோப்பியசமுகத்தினாலும் ஏனைய சர்வதேச சமுகங்களினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச் சுதந்திரப் பிரகடனங்களைத் தொடர்ந்து இந்நாடுகளில் இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பின் முதற்தடவையாக நடத்தப்பட்ட தேர்தல்களில் சுதந்திரப் பிரகடனங்களுக்கு மக்கள் தமது அமோக ஆதரவை அளித்துள்ளனர்.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின் வந்த காலங்களில் அண்மைக் காலம் வரை தேசியவிடுதலை கோரும் இனங்களுக்கு விடுதலை அளிப்பதும், ஏற்கனவே இருந்துவருகின்ற நிர்வாகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதும் ஒரு பிராந்தியத்தில் சமாதானத்திற்கே பங்கமாய் முடியுமென்ற கருத்தே சர்வதேச அதிகார அரசுகளின் பொதுவான கருத்தாயும் நம்பிக்கையாயுமிருந்தது. எனினும் சுயநிர்ணயவுரிமை புதிய உத்வேகம் கண்டுள்ள இவ்வேளையில் தேசிய உணர்வுகளை சில காலத்திற்கு அடக்கிவைத்திருக்க முடிந்தாலும் அழிக்கமுடியாது என்பது தெளிவாகியுள்ளது. மேலும், கட்டாய ஒருமைப்பாட்டிற்காக அடக்குமுறையினைத் திணிப்பதும் நீண்டநோக்கில் சமாதானத்திற்குப் பங்கமானது என்பதும் இந் நிகழ்வுகளின் வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.

## யூகோஸ்லாவிய உதாரணம்

ஆறு சமஷ்டிக் குடியரசுகளைக் கொண்ட முன்னைய யூகோஸ்லாவியாவில் பல்வேறு இனங்களுக்கிடையேயான போரானது முடிவுக்கு வராத நிலையிலுள்ளது. இதுவரை தம்மைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தியுள்ள குடியரசுகளில் ஸ்லோவேனியா, குரோஷியா ஆகிய குடியரசுகளை சுதந்திரமான தனியரசுகளாக சர்வதேச சமுகமானது அங்கீகரித்துள்ளது. பால்டிக் பகுதியில் இனப்பிரச்சனையானது முனைப்படைந்தவேளையில் இப்பகுதியில் இனங்களின் தேசியவாதமானது தற்கொலைக்கே இட்டுச்செல்லும் என்று பிரிவினையினை ஆதரிக்காத சர்வதேச நாடுகளிற் பல குறுகிய காலத்தில் தமது கருத்துக்களை மாற்றிக்கொண்டன. யூகோஸ்லாவியக்

குடியரசுகள் சார்பான இந்தியாவின் சடுதியான மனமாற்றத்தினை இங்கு உதாரணமாகக்




கொள்ளலாம். வேகமாக மாறிவரும் உலகின் யதார்த்தத்தினைப் பற்றிய விழிப்புணர்வு பிரிவினைக்கெதிரான அரசுகளின் கடுமையான போக்கினைக் குறைத்துள்ளதுடன் ஒத்தியங்கமுடியாத இனங்களைக் கொண்ட நாடுகளில் அரசுகளுக்குப் பதில் பொதுநலவாய மற்றும் கூட்டுச்சமுக உருவாக்கமும் ஏற்பட்டுவருகின்றது. தனிப்பட்ட நாடுகளைப் போலவே பல்வேறு நாடுகள் பிரதிநிதித்துவம் வகிக்கும் சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களும் அவை அரசுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்ற வாதத்தினடிப்படையில் நாடுகளின் பிளவிற்கு எதிர்ப்பான கொள்கையினைக் கடைப்பிடித்துவந்தன. 1991 ஜூன் மாதத்தில் யுத்தமுரண்பாடு யூகோஸ்லாவியாவில் ஆரம்பித்தவேளையில் முன்னைநாள் ஐ. நா சபையின் செயலாளர் நாயகமான பெரஸ் டி குவாலியர் "உலக அமைப்புக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு உள்நாட்டுவிடயம் எனக் குறிப்பிட்டிருந்தார். ஐரோப்பிய சமூகம் கூட இவ்வகைக் கொள்கையினையே கடைப்பிடித்தது. அச்சமயம் ஐரோப்பியசமூகத்தில் ஒல்லாந்து நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெளிவிவகார அமைச்சர் ஹான்ஸ் வான் தென் புருக் முன்னைநாள் யூகோஸ்லாவியாவின் பிரதேசஒருமைப்பாட்டை ஆதரித்துக் கருத்துக்கூறியதுடன் ஸ்லோவேனியா, குரோஷியா குடியரசுகளின் சுதந்திரம் தமது கவனத்திலில்லையெனவும் குறிப்பிட்டார்.

இருந்தும் இறுதியில் இத் தேசிய முரண்பாட்டுயுத்தம் நாட்டின் எல்லைகளைத் தாண்டி உலக சமாதானத்திற்கும் ஸ்திரத்தன்மைக்கும் பாதகமாக மாறிவிடும் அபாயத்தினை உணர்ந்ததும் ஐரோப்பியசமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையென்பன தமது ஆரம்ப நிலைப்பாட்டிலிருந்துவிலகி தமது கொள்கையினை மாற்றி அமைத்ததுடன். ஆயுதத்தடை, சமாதானப்படையினை அனுப்புதல் என்றவாறு செயல்ரீதியான ஈடுபாட்டையும் காட்டியுள்ளன.

இவ்வாறு சர்வதேச சமூகம் குறிப்பாக ஐரோப்பிய சமூகம் (EC) யூகோஸ்லாவியாப் பிரச்சனையில் ஆழ்ந்த அக்கறையினைக் காட்டுவதற்கு (தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகிப்பதற்குக் காட்டும் உறுதியினை விட) மேலும் ஒரு காரணமுள்ளது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் ஐரோப்பாவில் யுத்தங்கள் நடைபெறவில்லை. ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலான யுத்தங்கள் ஆசியா, ஆபிரிக்கா, தென்னமெரிக்கா, மத்திய கிழக்குப் பகுதிக்கு நகர்த்தப்பட்டிருந்தன. ஆனால் இன்று தேசிய இனங்களின் சுயநிர்ணயவுரிமையின் அடிப்படையில் யூகோஸ்லாவியாவில் தேசிய இனங்கள் தனிநாட்டினைப் பிரகடனப்படுத்துவதும் அவற்றை முறியடிக்க சேர்பிய அதிகாரவர்க்கம் போர்தொடுப்பதுமாக ஐரோப்பாவில் யுத்த சூழல் தோன்றியுள்ளது...அது ஐரோப்பியநாடுகளின் நலன்களைப் பொறுத்தவரை விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் என்னவழியினாலும் இந்த யுத்தத்தை நிறுத்த அவை முனைகின்றன. புதிய நாடுகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக்கொண்ட தேசிய இனங்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமையில் உறுதியாக இருப்பதனால் இவ் யுத்தத்தினை நிறுத்த புதிய நாடுகளை அங்கீகரித்து வலுச் சமநிலையினை (*balance of power*) ஏற்படுத்தவேண்டிய நிலை ஐரோப்பிய சமூகத்திற்கு ஏற்பட்டது.

இன்று இன்னுமொருபோக்கினையும் நாம் செக்கோஸ்லாவாக்கியாவில் அவதானிக்கமுடிகிறது. செக், ஸ்லோவாக் தேசிய இனங்கள் எந்தவித மோதலுமின்றிச் சமாதானமாகப் பிரிந்துசெல்ல எடுத்திருக்கும்

முடிவே இப்போக்கினைப் பிரதிபலிக்கின்றது. தமது சுயநிர்ணயவுரிமையின் அடிப்படையில் இணைந்து ஒரு நாடாக இருந்த இவ்விரு தேசிய இனங்களும் மீண்டும் தமது சுயநிர்ணயவுரிமையின் அடிப்படையில் பிரிந்துபோகத் தீர்மானித்திருப்பது தேசிய இனங்கள் சமாதானமான முறையிலே தமது சுயநிர்ணயவுரிமையினை நிலைநிறுத்தமுடியுமென்பதனை வெளிப்படுத்துகிறது.

## சர்வதேச சூழலும் எமது நிலையும்

இன்று சர்வதேச ரீதியாகத் தேசிய இனங்களின் சுயநிர்ணயவுரிமையின் அடிப்படையில் பல புதிய நாடுகள் உருவாகி வருகின்றமையினை நோக்கினோம். சோவியத் யூனியன் பல நாடுகளாகப் பிரியும்போது முதலாளித்துவநாடுகள் அதனை வரவேற்கும் நிலைப்பாட்டினை (அணுவாயுதம்போன்ற ஒருசில விடயங்கள் தொடர்பாக ஆழ்ந்த அக்கறை செலுத்தியபோதும்) கொண்டிருந்தன. இங்கு தேசிய இனங்கள் உரிமையினைப் பெறவேண்டுமென்பதைவிட கம்யூனிச சோவியத்யூனியன் உடையவேண்டும் என்ற அவாவே இந் நாடுகளிடம் இருந்தனவென்பது பலராலும் உணரப்பட்டவிடயமே.

இச் சூழலில் எமது நிலையினை நோக்குவோம். தனது சுயநிர்ணயவுரிமையினை நிலைநிறுத்துவதற்காகப் போராடும் தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டத்தினை ஆதரிப்பதற்கு, அங்கீகரிப்பதற்கு தமது நலனின் அடிப்படையில் எந்த நாடுகளும் முன்வரக்கூடிய நிலைமைகளும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. அதனாலேயேதான் சோவியத்யூனியனில், யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற மனிதவுரிமைப் பிரச்சனையையும், அழிவுகளையும் விடப் பலமடங்கு எமது மண்ணில் இடம்பெற்றும் உலகின் கவனம் பெரிய அளவில் எம்மீது திரும்பவில்லை (ஒரு சிலநாடுகளின் முயற்சினைத் தவிர).

ஆனால், உலகில் நடைபெறும் யுத்தங்களை நிறுத்துவதற்கு ஐக்கியநாடுகள் சபை முன்னரைவிட கனதியான பாத்திரத்தினை வகிக்கத்தொடங்கியுள்ளது. கெடுபிடியுத்தம் (cold war) முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவநாடுகளின் ஆதிக்கம் ஐக்கியநாடுகள் சபையில் ஓங்கியிருந்தபோதும் வீட்டோ (veto) போன்ற இடையூறின்றி ஐ.நா சபையில் பலவிடயங்கள் செய்யமுடிகின்றது. உலகில் யுத்தங்களை முடிவில் கொண்டுவரும் நோக்குடன் அரச சார்பற்ற பல அமைப்புக்களும் செயற்பட்டுவருகின்றன.

இத்தகைய நிலைமைகளின் வளர்ச்சிப்போக்கு எமது பிரச்சனையையும் சர்வதேச சமாதான முயற்சிகளுக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளது. இன்றையநிலையில் இந்தியா சர்வதேச சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையிடுவதும், ஸ்ரீலங்கா அரசு சர்வதேச முயற்சிகளைத் தந்திரமாக நிராகரிப்பதும் சர்வதேச சமாதான முயற்சிகளை முடக்கிவைத்துள்ளபோதும் இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளினால் தொடர்ச்சியாக இதனைச் செய்யமுடியாத சூழல் இருக்கின்றது.

இவ்வாறு சர்வதேச மத்தியஸ்தங்கள் ஏற்படும் சூழலில் இன்று ஐரோப்பியாவில் உருவாகியுள்ள புதியநாடுகளும் அவற்றிற்கு ஏனைய நாடுகள் கொடுத்த அங்கீகாரமும் எமக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக அமைந்துவிடும். எமது போராட்டத்தினதும் கோரிக்கைகளினதும் நியாயங்களை ஐரோப்பாவில் சுயநிர்ணயவுரிமையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய நாடுகளுடன் ஒப்பிட்டு நாம் முன்வைக்கும்போது அவற்றினை நிராகரித்து எம்மீது அரைகுறைத் தீர்வினைத் திணிக்கமுடியாத ஒரு சாதகமான சந்தர்ப்பத்தினை அளிக்கும்.

இதனைச் ஸ்ரீலங்கா இந்திய அரசுகள் நன்கு புரிந்தே வைத்துள்ளன. இதனால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயவுரிமைக்கான போராட்டம் சர்வதேச அந்தஸ்தினைப் பெறுவதனை அவை விரும்பவில்லை. ஸ்ரீலங்கா அரசு சர்வதேச முயற்சிகளை தந்திரமாக நிராகரித்து இராணுவரீதியில் எமது போராட்டத்தை நசுக்கிவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் இந்தியா தமிழரின் தேசிய இயக்கமாகிய விடுதலைப் புலிகளைச் சர்வதேச அரங்கில் "பயங்கரவாதிகளாக" சித்தரிக்கமுயல்வதற்கும் இதுவே காரணமாகும்.

இருந்தும் நாம் எம்மை நன்கு பலப்படுத்தி, எமக்கெதிரான இராணுவ ஒடுக்குமுறையினை முறியடித்து நிமிர்ந்து நிற்கும் போது, இராணுவ ரீதியில் தமிழ்த் தேசிய இனத்தினை நசுக்க முடியாதென்பதை தொடர்ச்சியாக உணர்த்தும் போது எமக்கான சர்வதேச அந்தஸ்து மேலும் வளரவே செய்யும் (இன்று பல சர்வதேச அமைப்புக்கள் எமது பிரச்சினையில் அக்கறை செலுத்துகின்றன. இவை பெரும்பாலும் அரச சார்பற்ற அமைப்புக்களாக உள்ளன)

இச் சர்வதேச சமாதான முயற்சிகள் இடம்பெறின் எமது நிலை பலம் மிகுந்ததாக இருக்கும். அதற்கு இன்று ஐரோப்பாவில் புதியநாடுகள் தோன்றியுள்ளமை உறுதுணையாக விளங்கும். நாம் சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு வழிசமைக்கும்.

# பனித்துளி வாழ்வு

காட்டாற்று வெள்ளத்தில்
கரையொதுங்கும் படகுகளாய்
குளிர்காலத்து இருண்ட பகலொன்றில்
என் படகும் மிதந்தது.

முக்காடு அணிந்து
முகம் மறைத்த பெண்ணாய்
வெண்பனியில் இலைமறைத்து
எனை வரவேற்ற மரங்களும்

பஞ்சுப் பொதிகளாய்
மெல்லக் கீழிறங்கி
குளிர்நீர் சிந்திய பனித்துகள்களும்

மெல்லக் கரைய கோடைவரும்

பகல்நேரத்துச் சிறு கனவாய்
கோடை கழிய
முகம் விறைக்க
குளிர்காற்று வீசத் தொடங்கும்

கோடையும் குளிருமாய்
வாழ்வு கிழிபட
நாளை பொரித்துக் குஞ்சாகுமென
நெஞ்சினில் அடைகாத்த
கனவுமுட்டைகள் கூழாகி உடையும்
கொஞ்சம் கொஞ்சமாக............

"உனக்கென்ன வெளிநாட்டில்
ராசா வாழ்க்கை......"
செலவுக்குப் பணம் கேட்டு வருகின்ற
தபால்களின் கேலிகள்.

போன குளிர் காலத்தில்
பார்வைக்கு அழகாய் மெல்லத்தரையிறங்கி
உடைந்து நீராகி மறைந்த
வெண்பனித் துகள்களாய் வாழ்வு ஆனதை
யாரிடம் சொல்வேன்..........

இன்னும் எத்தனை
குளிர்காற்று மோதும் சாமங்களில்
தூக்கம் கலைந்து
தனிமைச்சிறையில் அடைபட்ட கைதியாய்
நெஞ்சில் மூச்சு அடைபட
ஓவென ஜன்னலைத் திறந்து
வயற்பரப்பில் நின்று
வானத்தை அண்ணாந்து பார்க்கும்
ஒரு ஏழை விவசாயியைப் போல
கண்களைக் கூராக்கி
பார்வையைச் செலுத்தித் தேடுவேன்
எங்கே இருக்கிறது
எனது தாயகம்........

– அர்ச்சுனா

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையும் தேசியவாதமும்

இன்று வரலாற்று ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் இனத்தாலோ அல்லது மொழியாலோ அல்லது மதத்தாலோ அல்லது வேறுபட்ட அடிப்படையிலா ஒன்றுபட்ட மக்களின் தேசியவாதமும் சுயநிர்ணய உரிமையும் ஒரு விவாதத்திற்குரிய அம்சமாக இருந்துவந்துள்ளது.

18ம் 19ம் நூற்றாண்டுகளில் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது தேசியவாதத்தின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஒட்டோமான், ஆஸ்திரியா, ஜெர்மானியா, ருஷ்யப் பேரரசுகள் தம்மைச் சுற்றியிருக்கும் சிறிய நாடுகளைக் கைப்பற்றி, அடிமைப்படுத்தும் முயற்சி முற்றிலும் எதிர்மாறான விளைவுகளையே கொடுத்தது.

**மாறன்**

இதை இன்றைய எமது நிலையில் குறிப்பிடப்போனால் எவ்வாறு, கொழும்பில் உள்ள சிங்கள அரசு வடகிழக்கில் இருக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்தும், தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தும்போது, எவ்வாறு ஈழத்தமிழரின் போராட்ட பிரதேச அல்லது சமஷ்டி ஆட்சியிலிருந்து மாறி ஒரு முழுமையான சுதந்திரம் வேண்டிப் போராடுவதற்கு ஒப்பானதாகும்.

முதலாம் உலகமகாயுத்தத்தின்போது, ஆஸ்திரிய, கங்கேரியா ஒட்டோமான் பேரரசுகளினது தோல்விகள், இப்பேரரசினால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகள், தம்மைச் சீரமைத்துக்கொண்டு சுயநிர்ணயவுரிமையையே அடிப்படையாக அமைந்தது.

தோல்வியடைந்த பேரரசுகளின் நில அமைப்பில் அமைந்த தேசங்களுக்கு மட்டுமே சுயநிர்ணய உரிமை உண்டெனவும் காலனித்துவ ஆட்சியில் உள்ள நாடுகளுக்கு அவ்வுரிமை இல்லையெனவும் அவ்வேளை கருதப்பட்டது.

வூட்றோ வில்சனின் 14 அம்சங்கள் அடங்கிய திட்டம் சின்னாபின்னமான ஆஸ்திரிய, கங்கேரிய, ஒட்டோமான் பேரரசுகளிலிருந்து புதிய சுதந்திரமான அரசுகளை அமைக்க ஏதுவாக இருந்தது. இத்திட்டங்களுக்கு உதவியாக சுயநிர்ணய உரிமைக்கு மூன்று விதிமுறைகளை முன்வைத்தனர்.

1). மக்களையும், பிரதேசங்களையும் ஆட்டத்தில நகர்த்தும் பகடைக் காய்களாக நாட்டுக்கு நாடு மாற்றமுடியாது

2). நாட்டின் எல்லைகளை அங்கு வாழும் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டே வரையறுக்கப்படவேண்டும்.

3). நன்கு வரையறுக்கப்பட்ட தேசிய ரீதியிலான தன்மைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்1.

முதலாம் உலகயுத்தத்தின் பின்னர் புதிய நாடுகள் உருவாக சுயநிர்ணய உரிமை மட்டுமல்ல, சக்திவாய்ந்த அரசுகளின் ஆதரவும் இன்றியமையாததாக இருந்தது.

இன்று ஈழத்தில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை என்று குறிப்பிடும்போது சில சிக்கலான நிலைமைகள் எழுகின்றன. முஸலீம் மக்கள் தம்மை, தனித்துவமான இனக்குழுவாகக் கருதுகின்றனர்.

பின்லாந்து தேசத்தை, ரஷ்யப் பேரரசிலிருந்து பிரித்து எடுக்கும்போது எழுந்த நிலைமைகளை நோக்குவோம். பின்லாந்து தேசத்தை வரையறுக்கும்போது, ஓலான்ட் (Åland) தீவுகளும் பின்லாந்துடன் இணைக்கப்படவேண்டியிருந்தது. ஓலாந்து மக்களோ சுவீடிஸ் மொழி பேசுகின்றவர்களாக இருந்தார்கள். ஓலாந்து மக்களிடையே சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டிருக்குமானால் சுவீடன் நாட்டோடு சேருவதற்கு வாக்களித்திருப்பார்கள். 1157 ஆம் ஆண்டிலிருந்து 1809ம் ஆண்டுவரை சுவீடன் நாட்டின் ஒரு பகுதியாகத்தான் இத்தீவு இருந்தது. 1809 ஆம் ஆண்டில் ரஷ்யாவினால் தோற்கடிக்கப்பட்ட சுவீடன் Frederiksham இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில், ஓலாந்துத் தீவுகள் உட்பட பின்லாந்து ரஷ்யாவிடம்

கையளிக்கநேரிட்டது. ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்குப் பின்னர், 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற ரஸ்யப் புரட்சிக்குப் பின்னர் பின்லாந்து தன்னை சுதந்திரநாடாகப் பிரகடனப் படுத்தியது. அதேவேளை ஒலாந்து யாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்ற சர்ச்சை எழுந்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க (LEAGUE OF NATION) இடம் உதவி எதிர்பார்க்கப்பட (இவ்வமைப்பு 1945ம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கியநாடுகள் இயங்குவதுபோன்ற அமைப்பாகும்) பல நாடுகள் ஒலாந்து, பின்லாந்திடமே கையளிக்கப்படவேண்டுமென்ற முடிவை எடுத்தன (2. பின்லாந்து தேசமும் பெருந்தன்மையாக 1920 ஆம் ஆண்டு ஒலாந்து மக்களின் சுயநிர்ணயவுரிமையை அங்கிகரித்து அவர்களுக்குச் சுயாட்சியை வழங்கியது. சுவீடன் நாடும் இம்முடிவை ஏற்றுக்கொண்டது. ஒலாந்து மக்கள் தமது மொழி கலாச்சாரம், பண்பாடு அனைத்தையும் சுதந்திரமாகப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முழு உத்தரவாதத்தை இது அளித்தது. ஒலாந்து தேசத்தின் சட்டசபைக்கான நிறைவேற்று அதிகாரம், சட்ட அமைப்பு, நீதிமன்ற அமைப்பு ஆகியவற்றில் முழு அதிகாரம் இச் சுயாட்சியில் அமைந்துள்ளது. இவ்வாறான ஒரு தீர்வு இலங்கையில், பிரித்தானியரிடமிருந்து தீவு சுதந்திரமடைந்த காலத்தில் வழங்கப்பட்டிருக்குமானால் ஈழத்தமிழ்மக்களின் பிரச்சனை தற்போதைய நிலைக்குச் சென்றிருக்காது.

சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் மதம், மொழி, இனம் என்ற அடிப்படையில் மட்டுமல்லாமல் வேறு காரணிகளும் சேர்ந்து நிர்ணயிக்கின்றது என்பதை மாறிக்கொண்டிருக்கும் சர்வதேச அரசியற்சூழ்நிலையில் காணக்கூடியதாக இருக்கின்றது. லெனின், ஸ்ராலின் போன்றோர்கள் மக்களின் சுயநிர்ணய உரிமையினை நிலைநாட்டப் பெரிதும் உழைத்தவர்களென்று கூறுவதில் தவறேதும் இல்லை. ஆனால் இக்கொள்கையைப் பின்பற்றல் தமது வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கச் செல்ல வழிவகுக்கும் என்பதாலேயே இவ்வகையில் செயற்பட்டார்களென்று பலரும் கூறுகின்றார்கள். இவர்கள் சுயநிர்ணயவுரிமையை ஆதரித்தாலும் அம்மக்கள் சுயமாகப் பிரிந்து செல்லும் உரிமையை முற்றிலுமாக மறுத்தவர்கள். ஆனால் சோவியத் அமைப்பில் கலாச்சாரமொழி உரிமைகள பாதுகாக்கப்பட்டு மாநில சுயாட்சிகள் வழங்கப்பட்டது ஒருவகையில் ஒன்றுபட்டு இருப்பதற்கு வழிவகுத்தது எனக்கூறலாம்.

மக்களின் சுயநிர்ணயவுரிமையானது 1945ம் ஆண்டில் ஐக்கியநாடுகளின் சாசனத்தில் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக்கணிக்கப்படவில்லை; அப்படியான தேவையும் எழவில்லை. 1948 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் சுயநிர்ணய உரிமைபற்றிக் குறிப்பிடப்படவில்லை. 1960ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில் காலனித்துவ நாடுகளுக்கும், அந் நாட்டு மக்களுக்கும் சுதந்திரம் வழங்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்பிரகடனத்தில் சகலமக்களுக்கும் தமது அரசியல் சுதந்திர அடிப்படையில் பொருளாதார, சமூக, கலாச்சார ரீதியில் முழுமையான உரிமையுடையவர்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிரகடனத்துக்கு மேலும் பலமளிக்கும் வகையில் 1966ம் ஆண்டு ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையில் மனித உரிமை

***சகல மக்களுக்கும் சுயநிர்ணயவுரிமை உண்டு. அவர்கள் அந்த உரிமையின் அடிப்படையில் தமது அரசியல் நிலையைத் தீர்மானித்துக்கொள்ளவும், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியில் தமக்குள்ள சுதந்திரத்தினடிப்படையிலான ஈடுபாட்டுடன் அவற்றை வளர்க்கவும் உரிமையுடையவர்கள்***

சுயநிர்ணய உரிமை சம்பந்தமான ஐ.நா. தீர்மானம்.



சம்பந்தமான இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 80 நாடுகள் இத் தீர்மானத்திற்கு இசைந்து நடப்பதாக உறுதிகொடுத்தன(3. இத்தீர்மானத்தில் முதலாவது அம்சமாக சகல மக்களுக்கும் சுயநிர்ணயவுரிமை உண்டு எனவும், அந்த உரிமையின் அடிப்படையில் தமது அரசியல் நிலையைத் தீர்மானித்துக்கொள்ளவும், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியில் தமக்குள்ள சுதந்திரத்தினடிப்படையிலான ஈடுபாட்டுடன் அவற்றை வளர்க்கவும் உரிமையுடைவர்கள் எனக் குறிப்பிட்டது.

ஐ.நாவின் குடியியல், அரசியல் பிரகடனத்தின் 40ம் அம்சப்படி காலத்திற்குக் காலம் இவ் வொப்பந்தத்தில் உறுதிமொழி கொடுத்த நாடுகள் தம் நாட்டுக் குடிமக்களுக்கு வழங்கும் மனிதவுரிமையையும், அவ்வுத்தரவாதத் தன்மையையும், வளர்ச்சியையும் பற்றி ஐக்கியநாட்டு மனிதவுரிமைக்குழு வல்லுனர்களுக்கு அறிக்கை கையளிக்கப்படவேண்டும் என்று நியதியுண்டு. இவ்வறிக்கை அடிப்படையில் இவ்விரு சாராருக்குமிடையில் ஆலோசனைகள் நடைபெறுவது சாதாரண நடைமுறையாகும். ஆனால் பல நாடுகள் இவ்வறிக்கையைச் சமர்ப்பிப்பதிலும், மனித உரிமை வல்லுனர்கள் வழங்கும் ஆலோசனைகளைத் தம் நாடுகளில் நடைமுறைப்படுத்துவதில் அசிரத்தையாக நடந்துவருவது கவலைதரும் விடயமாகும். ஐ. நா. சபையின் மனிதவுரிமைகள் குழுவானது மனிதவுரிமை பற்றியும் சிறுபான்மை இனத்தவரின். உரிமை, பாதுகாப்புத் தன்மை பற்றியும் அண்மைக் காலங்களில் அதிக கவனம் செலுத்துகின்றது. சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படாததாலேயே மிகவும் சிக்கலான தேசியவாதம் சுயநிர்ணயவுரிமை போன்ற போராட்டங்கள் எழுகின்றன என்பது மறைக்கமுடியாத உண்மையாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் மனிதவுரிமை, சிறுபான்மையினத்தவரின் உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா மனிதவுரிமைக்குழு பல தடவைகளில் தனது கவலையையும் ஆலோசனைகளையும் கூறியுள்ளது. சில சமயங்களில் மனிதவுரிமை வல்லுனர்களே தாம் பெற்ற தகவல்களை உறுதிப்படுத்தும் நோக்கில் இலங்கைக்குப் பயணம் செய்து உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசு அதிகாரிகளையும் சந்தித்துப் பாரிய அறிக்கைகளையும் உலகத்தின் கண்முன் சமர்ப்பித்துள்ளனர். இவ்வருட ஆரம்பத்தில் காணாமற்போனவர்களின் விடயமாக 3 வல்லுனர்கள் இலங்கை சென்று மனித உரிமை உபகுழுவிடம் சமர்ப்பித்த அறிக்கையில்(4 இதுவரையில் எந்த நாட்டுடனும் ஒப்பிடுகின்ற அளவுக்கு மேலாக மனித உரிமை மீறல்களும் காணமற்போனவர்களின் எண்ணிக்யைும் ஸ்ரீலங்காவில் நடைபெற்றுள்ளதென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசோ தாம் பல வகைகளிலும் நிலைமைகளைச் சீரமைத்து புதிய ஆணைக்குழுக்களை நியமித்து விசாரணை மேற்கொண்டு பிழைகளைத் திருத்திக்கொள்கிறோம் என உறுதிமொழிகொடுக்கத் தவறுவதில்லை. அண்மையில் இலங்கை அரசு நியமித்த ஆணைக்குழுக்களில் ஒரு சில. பின்வருமாறு:

1.The Commission for Elimination of Discrimination and Monitoring of Fundamental Rights.
2.The Special Task Force on Human Rights of The Officials' Committee
3.Human Rights Task Force (HRTF)
4.The Presidential Commission of Inquiry into the Involuntary Removal of

Persons
5.Civil Information Centres
6.Mobile Legal Offices
7.The Committee to Process, Classify and Recommended Rehabilitation and Release of Suspects/Surrenderees (The Jayalath Committee)
8.The Independent Surrender Committee
9.Kokkadicholai Commission
10.Proposed Human Rights Commission
11.The Organization for the Protection of Human Rights Thorrough Law Enforcement Agencies(ORPTLEA)
12Committee to Probe the Arrest of Students
13.Presidential Commission on Youth Unrest
14.Ombudsman

இத்தனை விசாரணைக் குழுக்களை நியமித்தும் நிலைமை சீரடையவில்லை எனவும் மேலும் மனிதவுரிமை மீறல்கள் கூடிக்கொண்டே போவதாகவும் ஏசியாவீக் என்ற சர்வதேச மனிதவுரிமைக் குழுவின் அறிக்கையொன்று கூறுகினறது(5.

ஒரு தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தைக் குறைக்கவே சிறுபான்மை மக்களின் உரிமை,.மனிதவுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அழுத்தத்தை உலக நாடுகள் கொடுக்கமுனைகின்றன. இலங்கை அரசோ தனது புத்திசாதுரியத்தினால் தனக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஏதோவிதத்தில் பதிலைக்கொடுத்து காலம் தாழ்த்திக்கொண்டு செல்கின்றது. இக் காலதாமதத்தில் தமிழ் மக்களின் ஆன்ம பலத்தையும் ஆயுத பலத்தையும் குறைத்து தாம் விரும்பிய தீர்வுக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று எதிர்பார்க்கின்றது. இலங்கை அரசின் யுக்தியை தமிழீழ மக்களின் நீதியான போராட்டமே வெற்றிகொள்ளுமென்பதைத் திடமாக நம்பலாம்.

Notes:

1. Charles L.Mee, Jr., The End of Order (New York)

2. The Aaland Islands Question, Report presented to the Coucil of the league by the Commission of Rapporteur, League of Nations, Doc. B7.21/68/106(1921) pp. 27.

3. International Covenant on Economic, Social and Cultural Rights adopted 16 Dec. 1966 enteered into force 3 Jan. 1976, 999 U.N.T.S 3; Article 1 in both Covenants states, "All people have right of self-determination. By virture of the right they freely determine their political status and freely pursue their economic, social and cultural devolopment.

4. Report of the Working Group on Enforced or Involuntary Disappearances, Forty-seventh Session of the Commission on Human Rights, January 17, 1991, E/CN.4/1991/20, 42 pages

5. Human Rights Accountability in Sri Lanka, Asia Watch 31. May 1991



# வரலாற்றில் தமிழீழத் தேசிய இனம்

வரலாற்றை மாற்றுகின்ற வரலாறு ஒன்று தமிழீழ மக்களுக்கு மிக அவசியம் தேவையாகவுள்ளது. ஏனெனில் தமிழீழம், ஸ்ரீலங்காவின் உள்ளடங்கிய ஒரு தொகுதி என்ற அடிப்படையில் தமிழீழ மக்களின் வரலாறானது இயற்றப்பட்டுள்ளது. சிங்கள பௌத்தமத பீடத்தின் புனைந்துரைகளுடன் கூடிய மகாவம்சத்தின் பின்னணியில் இயற்றப்பட்ட கற்பனாவாதக் கதைகளே இன்று தமிழீழ மக்களின் வரலாறு என்ற பெயரில் உலாவருகின்றது. ஸ்ரீலங்கா அரச ஆதரவில் அதுவே அதிகாரப்பட்ட வரலாறாகவும் அந்தஸ்து பெற்றுள்ளது. அதனாலேயே இதனை எழுதப்பட்ட வரலாறு என்று கூறாமல் இயற்றப்பட்ட வரலாறு என்று குறிப்பிடுகிறேன். எனவே வரலாற்றை மாற்றுகிற வரலாறு ஒன்று எழுதப்பட்டேயாகவேண்டும். இது ஒரு பெரும்பணி. அப்பெரும்பணி ஒரு குழுவாலே அதுவும் துறைபோகக் கற்ற அறிஞர்களின் துணையோடு நூல்களின் சான்றுகளோடும் செய்யப்படவேண்டும். ஆயினும் அப் பெரும்பணியைத் தூண்டும் நோக்கோடு அப்பெரும்பணியின் அவசியத்தை உணர்த்தும் குறிப்புரையாக இக்கட்டுரையை முன்வைக்கின்றேன்.



## பற்றிமாகரன்

"தென்னிந்திய மக்களுக்கும் இலங்கையில் உள்ள சிங்கள -தமிழ் மக்களுக்குமிடையே இனப்பண்பாட்டு அமைப்பில் அதிக வேறுபாடுகள் காணமுடியாது. ஸ்ரீலங்காவின் பௌத்த பிக்குகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஆரியக் குடிவரவு ஒன்று நடைபெற்றது எனவும் அதுவே சிங்கள பௌத்த சமூக உருவாக்கலுக்கு வித்திட்டது எனவும் அதீத கற்பனாவாத கருத்துருவமொன்றைத் தோற்றுவித்தனர். இந்த புனைந்துரையே வரலாறாக மாற்றப்பட்டு இன்றுவரை சிங்கள மக்கள் மனதில் திணிக்கப்படுகிறது. இதுவே இனப்பகைமைக்கு சிங்கள மக்கள் இலகுவில் தூண்டப்படுவதற்கான மூலகாரணம்.

எதார்த்தபூர்வமாக நோக்கினால் ஆரிய குடிவரவு நடைபெற்றது என்பதற்கு எந்தவித புறச் சான்றுகளுமில்லை. ஸ்ரீலங்காவின் இனப்பண்பியல் தென்னிந்தியாவுடன் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு-கேரளா என்பவற்றுடன் மிக நெருங்கிய ஒப்புமையைக் காட்டுகிறது. இது ஒரு பொதுவான தொகுதியிலிருந்தே தமிழ்-சிங்கள கலாச்சாரங்கள் பெறப்பட்டுள்ளன(1 என்ற கருத்துருவாக்கத்தை மெய்ப்பிக்கின்றது. கலாநிதி. அருட்திரு தாவீது அடிகள் "தாமீழம்" என்கிற ஆதி மொழியிலிருந்தே (தமிழின் ஆதிவடிவம்) இன்றைய தமிழ், சிங்களம் இரண்டும் பரிணமித்தன என்பர். இதற்காதாரமாக சிங்களமொழியில் மூவாயிரத்துக்கும் அதிகமான பழந் திராவிடச் சொற்கள் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (உதாரணமாக யாழுவா என்ற சொல் நண்பனைக் குறிப்பதற்கு வழக்கிலுள்ளது. ஆனால் சங்க இலக்கியத்தில் மிக நெருங்கியவர்கள் யாழே என்றே அழைக்கப்படுவதைக் காணலாம். இந்த யாழே என்ற விளிப்பு மொழியே யாழுவா என இன்றைய சிங்களத்தில் காணப்படுகின்றது. இப்படியாக 3000 இற்கு மேற்பட்ட சிங்களச் சொற்களின் வேர்ச் சொல்லும் அர்த்தமும் தமிழின் ஆதிவடிவமாகவே காணப்படுவதை அடிகள் தமது ஆய்வுகளில் தெளிவாக விளக்கியுள்ளார் (2

இவ்விதமாக ஆதியில் மொழி-கலாச்சாரத்தன்மைகள் சிங்களவர்-தமிழரிடை ஒன்றாகவே இருந்துள்ளன. மகாவம்சத்தின் குவேனி தமிழீழத்தின் முத்த குடிகளின் சின்னமாகவும் விஜயன் குடிவரவால் அச் சமுகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்கும் கதாபாத்திரமாகவும் கொள்ள இடமுண்டு. ஆனால், இக்குடிவரவு அதிகாரப்பட்ட நிலையில் ஏற்படவில்லை. ஆபத்துதவியாகத் தொடங்கி அன்புறவாக வளர்ந்து பரிணாமமடைந்திருக்கிறது என்பது இங்கு ஈண்டு நோக்கப்படவேண்டியதொன்று. இவ்வகையில் பார்க்கையில் தமிழரின் ஆதிக் குலக்குழுவே இலங்கையின் ஆதிக் குடிகளாகவும் விஜயன் குடிவரவுமூலம் சிங்கள இனப்பிரிவைத் தோற்றுவிப்பதாகவுமே கொள்ள இடமுண்டு. சிங்களவரின் வருகை அதாவது விஜயனின் குடிவரவு கி.மு 5ம் நூற்றாண்டளவில் நடைபெற்றிருக்குமென்பது சிங்கள வரலாற்றாசிரியரான கே.எம்.டி சில்வாவின் கருத்து.(3



சங்கிலிமன்னன்
யாழப்பாணததின் இறுதித தமிழ் அரசன

இதே காலகட்டத்திற்கு முன்பே தமிழர்கள் அல்லது அவர்களுடைய ஆதிக்குடிகள் இலங்கையின் வடக்குக் கிழக்குப்பகுதிகளில் காணப்பட்டனரென வடக்கின் ஆனைக்கோட்டை, காரைநகர், கந்தரோடை அகழ்வாராய்ச்சிகளும் கிழக்கின் கதிரைவெளிப் பகுதிகளில் காணப்படும் நடுகற்களும் சான்றுபகர்கின்றன. கிறிஸ்துவிற்கு முந்திய தமிழ் மற்றும் பாளி இலக்கியங்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தவர்களை நாகர் (நாகாஸ் -*Nakas*) என்றும் அவர்கள் வாழ்ந்த நாட்டை நாகநாடு (*Naka Natu or Nagadipa*) என்றும் குறிப்பிடுகின்றனர்(4. ஆகவே இந்தப் பழங்குடிமக்களின் முதாதைகளாகவே குவேனியைக் கருத இடமுண்டு.

## பெருங்கற்காலமும் தமிழீழத் தாயகமும்

ஆனைக்கோட்டை அகழ்வாய்வுகள் முதலாவது யாழ்ப்பாணக் குடியேற்றம் பெருங்கற்காலத்தில் காணப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது (5. அவ்வாறே கிழக்கு மாகாணத்தின் கதிரைவெளிப் பகுதியில் காணப்படும் நடுகற்கள் இப்பகுதியிலும் மக்கள் பெருங்கற்காலத்தே வாழ்ந்துள்ளமையை இனங்காட்டுகின்றன(6. நடுகற்கள் மரபு திராவிட கலாச்சாரத்தின் ஆதாரமான ஒன்று என்பதனால் தமிழீழ மக்கள் திராவிடர்கள் என்பது உறுதியாகிறது. ஆனால் கடல்வழிப் பண்டமாற்றுக்கள் ஆரம்பமானதன் பின்னர் கந்தரோடை முக்கியத்துவம் பெறுகின்றது. இதேகாலத்தே கொற்கை, காவேரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு போன்ற தமிழ்நாட்டுப் பட்டினங்களும் வர்த்தகவளர்ச்சிபெற்றுத் திகழ்ந்தன. சமகாலத்திலேயே அனுராதபுரம், மகாகம போன்ற தென்னிலங்கை நகரங்களின் வளர்ச்சியும் ஏற்பட்டது.

இதில் அவதானிக்கப்படவேண்டிய வரலாற்று உண்மையொன்று உண்டு. பௌத்தமதம் தமிழ்ப்பகுதிகளூடாகவே தென்னிலங்கைக்கு சென்றிருக்கவேண்டும் என்பதே அது.

தென்னிந்திய மணிமேகலை காப்பியமும், தமிழ்நாட்டில் காணப்பட்ட பௌத்த விகாரைகள் பௌத்த பள்ளிகளின் வெளிப்பாடும் பௌத்தம் தென்னிந்திய தமிழகத்தில் எவ்வளவுதூரம் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது என்பதை விளக்குகிறது.

இதனாலேயே கந்தரோடை அகழ்வாராய்ச்சிகளில் பௌத்த கலாச்சாரத்திற்கான ஆதாரச் சான்றுகள் ஏராளமாகக் கிடைத்தன. பௌத்தம் தமிழர்களின் முக்கிய மதங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது என்ற வரலாற்று உண்மையை அறியாதவர்கள்தான்,

கந்தரோடை அகழ்வாராய்ச்சிகளை மட்டும் வைத்துக்கொண்டு தமிழீழத்தின் யாழ்ப்பாணக் கந்தரோடை-நயினாதீவு பிரதேசங்கள் சிங்களவர்களுடையது என்ற தவறான வரலாற்று முடிபுகளை வெளியிட்டனர். மணிமேகலை காப்பியம் யாழ்ப்பாணத்தை மணிபல்லவம் அல்லது மணிநாகதீவு என்று குறிப்பிடுவதுடன் இப்பிரதேசத்தை பௌத்தபுனித ஸ்தலமாகவும் போற்றுகிறது.

## யாழ்ப்பாண அரசின் விதையாக நாகராட்சி

நாகர் என்னும் வரலாற்றுக்கு முற்பட்ட குடிகள் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள பகுதிகளில் காணப்பட்டமையை இன்றைய வரலாறு ஏற்கிறது என்பதைக் கண்டுகொண்டோம். இந் நாகர்கள் குழுக்குழு நிலையிலிருந்து அரசமைக்கும் நிலைக்குச் சென்று அரசைத் தோற்றுவித்தனர். இலங்கையின் வேடர்கள் இனங்காணப்பட்டபின் அவர்களை ஆய்வு செய்பவர்கள் கூட அவர்கள் தமிழர் சிங்களவர்களின் கலப்புப் பண்புகளைக் கொண்டுள்ளனர் எனக் கூறுகின்றனர்(7. ஆகவே, தமிழ்க் குலக் குழுவான நாகர் இலங்கையின் அரசாக்கத்தில் மறுக்கப்படமுடியாத பங்கைக் கொண்டுள்ளனர். இலங்கையின் பழமைவாய்ந்த புவியியல் படம்கூட யாப்பாபட்டினம் உத்திரப்பிரதேச ராஜரட்ட, தக்கிணதேச, மலாயரட்ட, ருகுணரட்ட, தீகவாபி ஆகிய பிரிவுகளை தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. இதில் யாழ்ப்பாணம் யாப்பபட்டினம் எனக் குறிப்பிடப்படுகிறது. இன்றும் யாழ்ப்பாணம் சிங்களத்தில் யாப்பானாய என்றே அழைக்கப்படுகிறது. அத்துடன் மகாதித்த (மகாதீர்த்தம்-மன்னார்), கோகணா (திருகோணமலை) , தக்கிணதேசம், உத்திரதேசம் (உத்திரம்-வடக்கு, தக்கிணம்-தெற்கு) போன்ற சொற்களில் திராவிட தொனியே ஆழமாகத் தெரிகிறது. எனவே விஜயனின் குடிவரவால் மாற்றுமொழி வேற்றுக் கலாச்சாரம் என்பவற்றுடன் தொடர்புள்ள நாகர்களே சிங்கள இனமாகவும் பரிணாமமடைந்தனர் என்பது ஆய்வு செய்யப்படவேண்டிய உண்மை.
திருகோணமலைப் பகுதியிலும்கூட பண்டுவாசுதேவ எனும் விஜயனின் தம்பி மகன் குடிவரவு மூலம் நுழைவதையும் விஜயனின் பின்னர் அவன் உபதிஸ்ஸகமவில் ஏற்பட்டிருந்த அரசைக் கவிழ்த்து தனது ஆட்சியை அவனுடன் வந்த 31பேருடன் தொடங்குவதையும் மகாவம்சம் விளக்குகிறது. எனவே இரண்டாம் குடிவரவு அவர்களின் ஆட்சி விஸ்தீரணமடைவதைக் காட்டுகிறது.

## துட்டகைமுனுவின் யுத்தம் வெறும் ஆட்சி மாற்ற யுத்தமே

இவ் வடநாட்டார் வருகையினால் அனுராதபுர அரசு தோற்றம்பெற்றபோதும் கூட இவ் அனுராதபுர அரசில் தமிழ் அரசுகளும் காலத்திற்குக் காலம் ஆட்சியமைத்தனர் என்பது அவதானிக்கப்படவேண்டிய ஒன்று.

கி.மு 177 இல் தென்னிந்தியர் இருவர் அனுராதபுரத்தைக் கைப்பற்றி 22 ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளனர்(8 என இலங்கையின் மகாவம்ச வழிவந்த வரலாறு கூட ஏற்றுக்கொள்கிறது. தமிழர்களைத் தென்னிந்தியர்களென அழைப்பது மரபுப்பெயராகக் கருதலாம். கி.மு 145இல் எல்லாளன் அனுராதபுரத்தில் ஆட்சியேற்று 44 ஆண்டுகள் நீதி வழுவாது ஆட்சிபுரிந்துள்ளான். இக்காலத்தே எல்லாளனின் அமைச்சர்களில் ஒருவனான கவந்தீசனின் மகனான துட்டகைமுனுவிற்கும் எல்லாளனுக்கும் யுத்தம் நடைபெற்று துட்டகைமுனு வெற்றி பெறுகிறான்.

இந்த யுத்தத்தை சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையேயான யுத்தமென வர்ணிக்கின்றனர். உண்மையில் இந்த யுத்தம் இன அடிப்படையில் நடைபெறவில்லை என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. சிங்களவர்களிடை எல்லாளனுக்கு பேராதரவு இருந்தமையும் துட்டகைமுனு சிங்களவர்களின் எதிர்ப்பினால் சிங்களவர்களை எதிர்த்தும் போரிட்டான் என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது (9. அத்துடன் துட்டகைமுனுவின் தந்தை கவந்தீசனின் சகோதரியின் கணவனின் பெயர் சிவா. எனவே எல்லாளன்-துட்டகைமுனு யுத்தம் வெறும் ஆட்சிமாற்றத்திற்கான யுத்தமே தவிர அது இனங்களுக்கிடையேயான பகைமைச் சண்டையேயல்ல. அத்துடன் துட்டகைமுனு 15 வருடகாலமாக எல்லாளனுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளான் என்ற வரலாற்றுக் குறிப்பானது எல்லாளனின் ஆட்சி சிங்களவரிடையே எவ்வளவு வேரூன்றியிருந்தது என்பதை விளக்குகிறது. அத்துடன் துட்டகைமுனுவின் அரசாட்சியில்கூட தமிழர்கள் இராணுவத் தளபதிகளாகவும் மற்றும் பல அரச அதிகார பதவியுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். மானாவாமாவின் காலத்திலே அதாவது அனுராதபுர ஆட்சியின் இரண்டாவது காலகட்டத்திலேயே மானாவாமா தமிழர்களான இராணுவத் தளபதிகளை அகற்றியதாக(10 வரலாறு கூறுகிறது. ஆகவே துட்டகைமுனு காலத்தில் சிங்களவர்-தமிழர் இனப்பகைமையுணர்வு காணப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள்

ஆய்வுசெய்யப்படவேண்டியநிலையிலுள்ளன.

இனப்பகைமை உணர்வு இல்லாது இருந்தமையினால் தமிழர் தமது ஆட்சியை இராணுவ மயப்படுத்தவில்லை. அதனாலேதான் குலக்குழுக்களாகவும் பின்னர் சிறு சிறு குறுநிலமன்னர்களாகவுமே தமிழர்களின் ஆட்சிமுறைமை காணப்பட்டதினாலேயே தமிழரின் அரசு 14ம் நூற்றாண்டுவரை தனியான வடிவமாக வெளிப்படுத்தப்பெறாமல் காணப்படுகிறது.

தமிழ் இராணுவ அதிகாரிகளை அனுராதபுரத்திலிருந்து அகற்றிய மானாவாமன் கூட தனக்கு உறுதுணையாகத் தமிழ்நாட்டிலிருந்த பல்லவர்களின் படைப்பலத்தை நாடியுள்ளான்.

கி.பி 833-53 இல் பாண்டியனான சேனா I என்பவனும் கி.பி 815-60 இல் பாண்டியனான ஸ்ரீ மாற ஸ்ரீ வலப என்பவனும் அனுராதபுரத்தில் தமது ஆட்சியை நிறுவியுள்ளனர்.

இக்காலகட்டத்தையடுத்து..பாண்டிய மா மன்னனுக்கு எதிரான பாண்டிய அரசன் ஒருவனுடன் சேர்ந்து சிங்களப்படை மதுரை மாநகருள் புகுந்து மதுரையை அழித்ததாக மகாவமசம் கூறுகிறது. பின்னர் 915 இல் பாண்டிய அரசனான ராஜசிங்கம் II உடன் சேர்ந்து சிங்களப் படைகள் சோழரை எதிர்த்துப் போரிட்டுள்ளன. அத்துடன் சோழரிடம் தோல்வியுற்ற பாண்டிய மன்னர்கள் அனுராதபுரத்திலேயே ஒளிந்து வாழ்ந்துள்ளனர். வரலாறு இவ்வாறிருக்க அரசர்களிடை நடந்த யுத்தங்களையெல்லாம் இனப்பகைமை யுத்தமென மகாவம்சம் எடுத்துக்கூறி சிங்கள பௌத்த பேரினவாதத்தை வளர்த்தது.

பாண்டியனுடன் சிங்களவர் சேர்ந்து சோழராட்சிக்கெதிராகச் செயற்பட்டுவந்தமையை ஒடுக்குவதற்காகவே ராஜராஜசோழன் அனுராதபுரம் மீது படையெடுத்தானே தவிர அங்கு இனப்பகைமையோ இன ஒழிப்புணர்வோ இருக்கவில்லை.

மிகுந்து V என்பவனே கடைசியாக அனுராதபுரத்தையாண்ட சிங்கள மன்னன். 1017 இல் இவன் சோழரால் கைது செய்யப்பட்டான். ராஜராஜ சோழனின் மகனான ராஜேந்திரசோழன் காலத்தே இலங்கையைக் கைப்பற்றும் சோழரின் பணி முடிவடைந்தது. சோழர் சிங்கள அரசின் தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாற்றி "ஜனநாதமங்களம்" என அதற்குப் பெயருமிட்டு தமது ஆட்சிப்பகுதியாக புலிக்கொடியின் கீழ் அரசாண்டனர். ஆயினும் புலிக்கொடி ஆட்சி சிங்கள மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை, வாக்குரிமை உட்பட (குடவோலை) வழங்கியது.

சோழராட்சியில் வேலைக்காரப் படையாக வந்த வன்னிவீரர்கள் பொலநறுவைமுதல் நீர்கொழும்புவரை வியாபித்து வாழ்ந்தனர். சோழராட்சியின் வீழ்ச்சியையடுத்து சிங்களப்படைகள் இவ்வேலைக்காரப் படையாக வந்த வன்னியரோடு மோதினர். இதனால் இந்த வன்னியர்கள் தமிழீழத்தின் வன்னி, திருமலைப் பகுதிகளை நோக்கி நகர்ந்து தமது ஆளுமையினால் அப்பிரதேசங்களை தமதுடைமையாக்கி வன்னிப் பற்றுக்களைத் தோற்றுவித்தனர். இச் சோழராட்சியில் குடிவரலான பல தென்னிந்தியத் தமிழர்கள் நீர்கொழும்புவரை பரந்துவாழ்ந்து காலகெதியில் சிங்கள இனத்தின் ஒரு கூறாகியுமுள்ளனர்.

ஆயினும், சோழராட்சியைச் சிங்களவர் வீழ்த்தி பொலநறுவையை மீண்டும் கைப்பற்றியதன் பின்னர் சிங்களவர்கள் தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான யாழ். நகரை நோக்கியும் தமது ஆட்சி அதிகாரத்தை விஸ்தரிக்க முயன்றனர்.

இதனால் யாழ்ப்பாணம் தனக்கென ஒரு அரசை வெளிப்படுத்தவேண்டிய வரலாற்றுத்தேவை ஏற்பட்டது. 13ம் நூற்றாண்டிலிருந்தே யாழ்ப்பாண அரசின் வெளிப்பாடு மெதுமெதுவாக தெரியப்படுகிறது.

1247 இல் பராக்கிரமபாகு II இன் தம்பதேனியா ஆட்சிக்காலத்தில் மலேசிய மன்னனான சந்திரபானு பராக்கிரமபாகுவின் மீது படையெடுத்துவருகிறான். இதனைப் பராக்கிரமபாகு முறியடித்ததும் சந்திரபானு வடக்குநோக்கி ஓடிவந்து அங்கு ஆட்சி செய்த யாழ்ப்பாண ஆட்சியாளரை வீழ்த்திவிட்டு ஆட்சியமைக்கிறான். இங்கிருந்தவாறே மீண்டும் படையெடுக்கிறான். பராக்கிரமபாகு பாண்டியனின் உதவியை நாடுகிறான். இப் படையெடுப்பில் பாண்டியனதும், பராக்கிரமபாகு இஇ இனதும் கூட்டுப்படைகள் சந்திரபானுவைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர். பாண்டியர்கள் தமிழர்களைச் சிங்களவர்களைக் கொண்டு ஆளவைப்பது முறையல்ல எனக் கருதி பாண்டியப் படையின் தளபதியான ஆரிய சக்கரவர்த்தியை யாழ்ப்பாண அரசின் மன்னனாக முடிசூட்டுகின்றனர். இத்துடன் வரலாற்றில் இனங்காணப்படும் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகிறது. 14ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசே இலங்கைத்தீவின் அரசுகளில் மிகச் சக்திவாய்ந்த அரசாகக்காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியரான கே. எம். டி சில்வா எழுதியுள்ளார். (பக்கம் 84—*A History of Sri Lanka - the Fragmentation of polity- by K.M.de Silva*)

யாழ்ப்பாண அரசு தோன்றிய விதத்தையும் வன்னி அரசின் ஆரம்பத்தையும் கண்டோம். யாழ்ப்பாண அரசும் வன்னி அரசும் போர்த்துக்கேயர் இலங்கைத்தீவில் கால்வைக்கும்வரை நீடித்தன. இந்த இறைமையுள்ள இரு அரசுகளையும் ஆங்கிலேயர் வெற்றிகொண்டனர். அதிலும் கண்டி அரசு வீழ்ச்சியுற்ற பின்னர்தான் வன்னிக் குறுநில அரசு வீழ்ச்சிகண்டது.

ஆயினும் 1833 இல் கோல்புறூக் சீர்திருத்தத்தின்மூலம் இறைமையுள்ள தமிழ் அரசுக்களை சிங்கள அரசுடன் பிரிட்டிஷார் நிர்வாக வசதிக்காக ஒருங்கிணைத்தனர்.

இத் தமிழர் தாயகத்தை -சுயாதீனமான அரசுகளை- பிரிட்டிஷார் சோல்பரி யாப்பின் மூலம் சுதந்திரம் வழங்குகையில் (1948இல்) சிங்களப் பெரும்பான்மையினரிடம் கையளித்தனர். ஆயினும் சோல்பரி யாப்பு 29வது பிரிவு உபவிதியின்படி இலங்கைப் பாராளுமன்றம் சிறுபான்மை இனத்தவர்க்கெதிரான சட்டங்களை இயற்றினால் பிரிட்டிஷ் மகாராணி தலையிட்டு அதைத் தடைசெய்யலாம் என்ற காப்பு விதியை பிரிட்டிஷ் அரசு வாக்குறுதியாக அளித்தது. இதனால் இலங்கையரசின் இறைமை இலங்கைப் பாராளுமன்றத்திடமும் பிரிட்டிஷ் மகாராணியிடமும் பகிரப்பட்டுள்ளதென அரசியல் அமைப்பு விற்பனர்கள் கருதினர்.

இதன் அடிப்படையிலேயே கோடீஸ்வரன் தன்னை சிங்களம் படிக்கும்படி இலங்கையரசு வற்புறுத்தியது சட்டவிரோதமான செயல் என பிரகடனம் செய்யும்படி பிரிட்டிஷ் மகாராணியிடம் முறையிட்டார். பிரிட்டிஷ் நீதிமன்றம் இலங்கை அரசியல் அமைப்பில் தனக்கு இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசின் செயல் சட்டவிரோதமானது என அறிவித்தது.

இதுவே இலங்கையை ஸ்ரீலங்காக் குடியரசாக மாற்றிய 1972 அரசியலமைப்பிற்கு வித்திட்டது. பாராளுமன்றத்திற்கு வெளியே நாவரங்கலாவில் தமிழரின் பங்குபற்றலின்றி இயற்றப்பட்ட சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்பு தமிழர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை.

எனவே, இது தமிழீழ மக்கள் - பிரிட்டிஷ் அரசு சம்பந்தப்பட்ட சர்வதேசப் பிரச்சனையாகியது. தமிழீழ மக்களின் இறைமை பிரிட்டிஷ் அரசின் கைகளிலிருந்தது.


ஆனால், 1972 இற்குப் பின் அது ஸ்ரீலங்காவால் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகிறது.

தமிழீழ மக்கள் இதனை அகிம்சை வழியில் எதிர்த்தனர். ஸ்ரீலங்கா அரசு அதனை ஆயுதத்தால் அடக்கி தமிழின அழிப்பைத் தொடங்கியது.

இதுவே தமிழீழ விடுதலைப்போராட்டத்தைத் தோற்றுவித்தது. தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் மக்கள் அமைப்பின் மூலம் மக்கள் தமது ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இது சர்வதேச சமுகத்திற்கு ஒரு சவால். சர்வதேச சமுகம் இத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவையை; தோற்றத்தை; அவசியத்தை உணரவைக்கவேண்டிய கடமை வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழனினதும் சமுதாயக் கடமையாகிறது.

*1. First settlements in Jaffna- the chapters used:Colonisers and Settlers, The Anuradhapura Kingdom 1, The Fragmentation of the Sri Lankan polity.*
*2. see Fr. Davids works*
*3. A History of Sri Lanka- K.M. De Silva col settler page 1*
*4. paper mentioned in 01 page 5*
*5.page 4 Tamil Social Formation in Sri Lanka: A Historical out cry*
*6. Front Cover (inside) Tamil Social Formation in Sri Lanka: A Historical out cry*
*7. A History of Sri Lanka, page 7, Colonisers and Settlers*
*8. A History of Sri Lanka-K.M.de Silva, page 12, The Dravidian Influence.*
*9. A History of Sri Lanka-K.M.de Silva, page 15, para 3, lines 12 to 24*
*10. A History of Sri Lanka-K.M.de Silva, page 20, para 2, first five lines- The Anuradhapura Kingdom.*



# மேஜர் பசிலன்

சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்ற தமிழ் மக்கள், தம் உரிமையைப் பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மிதவாதிகளுக்கு வோட்டுக்களை அள்ளி வழங்கினார்கள்.

இன ஒழிப்பின் உச்சத்தில், பாரம்பரியப் பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஆக்கிரமிக்கப்படுவதையும் சொந்தக கிராமங்களிலிருந்து கட்டிய துணியுடன் அடித்து விரட்டபபட்டு, உணவின்றி தங்க இடமின்றி அநாதைகளாக்கப்படுவதையும் காரணமின்றி கண்ட கண்ட இடங்களில் சுடப்படுவதையும் கண்ணெதிரே கண்டபோதுதான் அகிம்சை தங்களைப் பாதுகாக்காது என்று தமிழ் மக்கள் புரிந்துகொண்டனர்.

ஆயுதமேந்தி உரிமைக்காகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது தமிழ் இளைய சமுதாயம்.

ஸ்ரீலங்கா அரசு மக்களை இம்சிப்பதையும் வெலிக்கடைச் சிறைச்சாலையினுள் கைதிகளாக்கப்பட்டிருந்த அப்பாவித்தமிழர்களைச் சிங்களக் கைதிகளும், சிங்கள இராணுவமும் இணைந்து திட்டமிட்டு மிருகத்தனமான முறையில் கொலை செய்ததையும் கண்டு ஈழ விடுதலையே இறுதித் தீர்வு என்ற உறுதியான முடிவிற்கு வந்தான் முள்ளியவளையைச் சேர்ந்த ஒரு இளைஞன்.


உறுதியான கொள்கையையும் தளம்பாத தலைமையையும் தமிழீழ விடுதலைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் கொரில்லாப் படையையும் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளினாலேயே இது சாத்தியம் என்பயை உணர்ந்து அவர்களுடன் தன்னை இணைத்துக்கொண்ட அமுதலிங்கம் என்ற அந்த இளைஞன்தான் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த பசிலன்.

தமிழர்க்கெதிரான இன அழிப்பில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடும் ஸ்ரீலங்கா கூலிப்படை மீது பசிலன் மேற்கொண்ட தாக்குதல்கள் எண்ணிலடங்காதவை.

முந்திரிகைக்குளத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தை எதிர்கொண்டு பன்னிரு கூலிப்படையினரைக் கொன்றதுடன் தமிழினத்தை அழிக்கப் பயன்படும் 12 துப்பாக்கிகளை எடுத்ததன் மூலம் மக்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்தான் வவுனியா மாவட்ட தாக்குதற்பிரிவுத் தலைவன் மேஜர் பசிலன்.

கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின்போது காயமடைந்த பசிலன் கிளிநொச்சியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து இனப்படுகொலைகளை நிறுத்த விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொரில்லாப் போரிலும் முக்கிய பங்கு வகித்தான்.

ஒரு கொரில்லாப்போராளியின் திறமைகளைத் தன்னகத்தே முழுமையாகக் கொண்டிருந்த பசிலன் ஒரு சிறந்த விகடகவியும், நடிகனுமாவான். தமிழீழத்தின் மரபு நாடகங்கள் இவன் நடிப்பினால் மெருகூட்டப்பட்டன என்பது மிகையாகாது. தன்னுடைய நகைச்சுவைப்பேச்சால் களைப்புற்ற சக தோழர்களைச் சிரிக்கவைத்துவிடுபவன் இவன். மக்களுக்கு போராட்ட உத்வேகத்தைத் தூண்டிவிடும் நாடகங்களிலும் ஆர்வத்துடன் பங்கேற்று திறமையாக நடிக்கும் பசிலன் தன்னுடைய கலகலப்பான சுபாவத்தினால் மக்களின் அபிமானத்தினைப் பெற்ற ஓர் போராளியாவான்.



பசிலனின் நினைவாக........

கோப்பாயில் இந்திய அழிவுப்படையை எதிர்த்து தரைப்படை டாங்கிகள் ஐந்தை நிர்மூலமாக்கி விடுதலைப்புலிக் கொரில்லாக்கள் பற்றி இந்திய இராணுவத்திற்கு ஓர் பீதியைத் தோற்றுவித்த பசிலன் முல்லைத்தீவில் நேரடி மோதலின் போது இந்தியப் படையின் ஷெல் தாக்குதலால் 08-11-87 அன்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான்.

தமிழீழ மண்ணிலிருந்து மறைந்தாலும் ஈழவிடுதலை வரலாற்றில் ஒரு நிலையான இடத்தில்.................

# புலேந்திரன்
## நினைவாக...

அன்பின் புலேந்திரன்!

இன்றைய நாளில் தஞ்சம் என்று சென்ற மக்களைக் கழுத்தைப் பிடித்து வெளியேற்றுகின்றது இந்திய அரசு. பருந்தின் பாதுகாப்பில் கோழிக்குஞ்சுகளை ஒப்படைக்கின்றது. 1956, 1977, 1983 கலவரங்களின்போது உங்களது சொந்த நாடு தமிழீழம் தான் என்று கப்பலில் அனுப்பியது ஸ்ரீலங்கா. அதையே தான் 1992 இல் இந்தியா



செய்கின்றது. ஆனால், அனுப்பப்படும் மக்கள் பணயக்கைதிகள் என்ற நிலையில் வருகிறார்கள். இந்தியா தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பான இடமல்ல என்ற செய்தி உணர்த்தப்படும்போது இந்திய இராணுவத்திலுள்ள மேஜர் கருப்பசாமி உனக்குச் சொன்ன "இன்றுமில்லை; இனி எப்போதுமில்லை" என்ற வாக்கியமே நினைவுக்கு வருகிறது.

**கரும்பறவை**

தமிழ் மக்களின் பாதுகாப்புக்குத் தானே உத்தரவாதம் ஏற்று எமது ஆயுதங்களைப் பெற்ற இந்தியா, நீ திருமலைக்குப் போவதற்குப் பாதுகாப்புக் கேட்டபோது இப்படிப் பதிலளித்தது. விடுதலைக்காகப் போரிடும் ஓரினம் தன்னைத் தானே நம்பியிருக்கவேண்டும் என்ற உண்மையை கருப்பசாமி வாயிலாக அன்று இந்தியா உணர்த்தியது. பின்னர் அதே செய்தி உனது மரணம் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

உனது மரணம் தமிழீழத்தையே உலுக்கியது. மாபெரும் வரலாற்றுத்துரோகமல்லவா அது! தமிழீழ வரலாற்றில் உனது பெயர் அழியா இடத்தைப் பெற்றதல்லவா. முதன்முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் (1981 இல் காங்கேசன் துறை வீதிச் சம்பவம்) பங்குபற்றியவர்களில் சீலன், ரஞ்சன் ஆகியோர் வீரச்சாவெய்தியபின் நீதானே எஞ்சியிருந்தாய். கடைசியில் நம்பிக்கைத் துரோகத்துக்கல்லவா நீ பலியாகியிருக்கிறாய். தமிழீழ விடுதலைப் போரின் பல வரலாற்றுப் பதிவுகள் உனது வீரச் சாவினால் ஸ்தம்பிதமாகிவிட்டனவே.

நான் இந்தியப் படையின் சிறையில் இருந்த காலத்தில் எனது மனைவி எனது மகளின் நிலையைப் பற்றி ஒரு செய்தி சொன்னாள். வீதியில் தமது தகப்பனுடன் செல்லும் குழந்தைகளை எனது மகள் வெறித்தபடியே பார்ப்பாளாம். தனது பார்வையிலிருந்து அவர்கள் மறையும்வரை வேறெதையும் பார்க்கமாட்டாளாம்; பேசமாட்டாளாம். இச்செய்தியைக் கேட்டதும் தந்தை அருகிலில்லாதது ஒரு குழந்தைக்கு எப்படியான ஏக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணரமுடிந்தது. கூடவே உனது ஞாபகம் என்னை விரட்டியது. எனது மகள் என்றோ ஒருநாள் தனது தந்தையைக் கண்டு இனிமேலும் அவளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால், உனது மகன் பிறக்கும்போதே "இன்றுமில்லை, இனி எப்போதுமில்லை என்ற நிலையல்லவா, ஓ...எவ்வளவு விலை கொடுத்திருக்கிறோம் எமது தாயக விடுதலைக்கு. கூடவே எம் இதயத்தின் சக்தியையும் கணக்கிட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் தாங்கும் வலிமையை எப்படிப் பெற்றுக்கொண்டோம் என்று".

இயக்கரீதியாக என்பதைவிட தனிப்பட்டமுறையிலும் எமது கிராமத்து மக்களின் இதயத்தைப் பொறுத்தவரை நீ அவர்களது தத்துப்பிள்ளை. பாடசாலை மாணவர்கள் என்ற போர்வையில் பொட்டுவின் வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். மீள வருமா அந்த நாட்கள்...? "புலேந்திரன், புலேந்திரன்" என்று உருகி வழிந்தார்களே எனது கிராம மக்கள் எங்கள் எல்லோருக்கிடையில் உன்னிடம் மட்டும் அப்படி என்ன சக்தியிருந்தது? விஷேடமான கறிகள் சமைத்தாலோ; கோயில் விஷேசங்களின் பிரசாதங்களென்றாலோ உனது பெயரைச் சொல்லி விசாரித்துக்கொண்டுவந்து ஒரு பங்கைத் தருவார்களே, அது ஏன்?

அந்தக்காலத்தில் எனது கிராமத்தில் நடந்த மரண ஊர்வலங்களில் பிரேதத்தைச் சுமக்கும் தோள்களில் ஒன்று உன்னுடையது. மங்கள காரியங்கள் நடைபெறும் வீடுகளில் அலங்கார வேலைகளுக்கிடையே உனதுகுரல் தனித்துக்கேட்கும். குடும்பத்தில் முரண்டுபிடிக்கும் இளைஞர்களுக்கெல்லாம் உனது வார்த்தைகள் நாணயக் கயிறு. மாலைநேரத்தில் சனசமூகநிலைய மைதானத்தில் நீதான் உதைபந்தாட்டப் பயிற்சியாளன். அயலிலுள்ள மாணவர்களுக்கு இலவசக்கல்வி போதனையாளன். இன்னுமின்னும் எத்தனையெத்தனை? இந்தச் சம்பவங்களையெல்லாம் எனது கிராம மக்கள் ஞாபகப்படுத்திச் சொல்கையில் அவர்களது கண்கள் கலங்கும், தொண்டை அடைத்துக்கொள்ளும் மீண்டும் பிறந்துவரமாட்டாயா என்ற ஏக்கம் பிறக்கும்.

"சுப்பர்சோனிக்" அதுதான் நாங்கள் உனக்கு இட்ட பெயர். எங்கும், எதிலும் வேகம் காட்டும் உனது போக்கு- மிதிவண்டி தொடங்கி எந்த வாகனத்திலும் உன்னுடன் நாம் வரப் பயப்படுவது உனது வேகத்தைப் பார்த்துத்தான். எங்கே போய் அடிபட்டாலும் இறுதியில் நொண்டுவதும் நாங்கள்தான். நீ சிரித்தபடியே எழும்பிவருவாய். அப்படியான சந்தர்ப்பங்களில் ஒருபோதுமே நீ உனது தவறை ஒத்துக்கொள்வதில்லை. நானென்ன செய்யிறது? திடீரென்று வந்திட்டான்- திடீரென்று வளைவுவந்திச்சிது என்றெல்லாம் நீ சொல்லும்போது நாங்கள் வலியை மறந்து சிரிப்போம். பயிற்சியின் போதும் ஒழுங்காகச் செய்யாததற்காக நாங்கள் தண்டனை பெறும்போது நீ மேலதிகமாகச் செய்ததற்காகத் தண்டனை பெறுவாய். அந்தக் கடுமையான பயிற்சி முடிந்ததும் நாங்கள் தரையிற்கிடந்து தத்தளிக்கும்போது நீயோ சிரித்தபடியே துள்ளித்திரிவாய் மீண்டும் வருமா அந்த நாட்கள்?

நாங்கள் செம்மணியிலிருந்து கொடிகாமம் வரை ஓடிப் பயிற்சியெடுப்பது எதுக்கு ஓடுகிறோம் என்று தெரியாமல் எமது கிராமத்து இளைஞர்கள் நாங்களும் வாறம் எனத் துணைக்கு ஓடிவருவது எந்த இடத்து ரேசுக்கு ஓடிப் பழகுகிறீர்கள்? என்று சாவகச்சேரி காவல்நிலையக் காவலர்கள் கேட்பது இவற்றில் நான் எதை நினைப்பது, எதை மறப்பது. அன்று எமது வியர்வையைத் தாங்கிக்கொண்ட அந்த வீதி, அதன்வழி செல்லும்போது உதிரும் கண்ணீரையும் ஏற்றுக்கொள்கிறது. உனது மகன் வளரட்டும் இந்தப் பாதையெல்லாம் கூட்டிச்சென்று இதால் தானடா கொப்பரும் நாங்களும் ஓடிப் பழகினது என்று காட்டுகிறேன்.

புலேந்திரன் நடாத்திய தாக்குதல்கள் ஒவ்வொன்றுமே சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்தவை. ஸ்ரீலங்காவின் சகல படைகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடாத்தியிருக்கிறாய். குடியேற்றம் மூலம் எமது பாரம்பரியப் பிரதேசங்களை கபளீகரம் செய்யமுனைந்த சிங்களப் பேரினவாதிகளுக்கு நீ சிம்மசொப்பனமாகத் திரிந்தாய். அதனாற்தான் உன்னைப் பணயமாக வைத்து தமது சிப்பாய்களைக் கேட்கமுனைந்தது ஸ்ரீலங்கா அரசு. மணமாகி மூன்றுமாதங்கள் உனது வாரிசைச் சுமக்கும் உனது மனைவி இந்த நிலையிலும் நீ அடிபணிய மறுத்தாய். ஸ்ரீலங்கா இராணுவத்தினர் யுத்தகாலத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள். நாம் சமாதான காலத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் என்றாய். முடிவில் சயனைட் உட்கொண்ட நிலையிலும் கைகள், கால்கள், பற்களால் யுத்தம் நிகழ்த்தினாய்.

உனது உடலில் தெரிந்த காயங்கள் சிங்களப்படை உன்மீது எவ்வளவு ஆத்திரம் கொண்டிருந்தது என்பதைப் புலப்படுத்தின. உனது புகழுடலைப் பொறுப்பேற்றபோது அதிலிருந்த காயங்களைக் காட்டி இதைப்போல் இரண்டாயிரம் உடல்களைத் தரத் தயாராயிருக்கிறம் என்றுசொன்னார் மாத்தையா. ஆனால் அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட சிப்பாய்களின் சடலங்களைச் சுமந்து சென்றன இந்திய விமானப்படை விமானங்கள்.

இந்தியா எமக்குச் செய்த பாவத்தைக் கழுவ புனிதகங்கை நீர் போதாது என்று ஒரு வரலாற்றறிஞர் குறிப்பிட்டதை நினைவுகூருகின்றேன். திலீபனின் மரணம், உனது மரணம், எமது மக்களுக்கெதிரான போர் இவற்றைக் குறித்தே அவர் அவ்வாறு கூறினார். அத்துடன் இப்போது மேலதிகமாக அகதிகளைச் சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்கும் பாவத்தைச் செய்கிறது. இந்தப் பாவத்தைக் கழுவ வேறு நாடுகளிடம் தான்தண்ணீருக்கும் கடன்வாங்கவேண்டும் இந்தியா.

# இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான உள்நாட்டுப் போரின் தாக்கம்

## அறிமுகம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் போரினது பொருளாதாரத் தாக்கத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது. தற்பொழுது இலங்கையில் நடந்துகொண்டிருக்கின்ற குழப்பம் உள்நாட்டுப்போர்தான் என்பது ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது(1 அதனால் இங்கும் உள்நாட்டுப்போர் என்ற சொற்பதமே பயன்படுத்தப்படுகிறது.

மேலும் எம்மில் பலருக்கு உள்நாட்டுப்போரினால் பொருளாதாரத் தாக்கம் உண்டெனபது தெரியாத ஒன்று; சிலருக்குப் புரியாத ஒன்று. அவர்களுக்காகவே இது எழுதப்படுகிறது. அவர்களே என் இலக்குக் குழு (target group). அத்தோடு எனது ஒருவகைப்பட்ட சமூகச் சஞ்சரிப்பும் கூட. எனவே போர்த்தாக்க விளைவு(2 வீதத்தினை-அதாவது உள்நாட்டுப்போர் எந்த அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றதென்பதை விளக்குவதற்காக பொருளாதாரக் கலைச் சொற்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டு மிகவும் எளிய நடையில் இது எழுதப்பட்டுள்ளது. எளிமை 20ம் நூற்றாண்டின் முக்கிய இலக்கியப் பண்பு. மேலும் இக் கட்டுரையை மிகவும் கவனமாக வாசிக்கின்ற ஒவ்வொருவரும் போர்த்தாக்கவிளைவு வீதத்ததை விளங்கிக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை.

மேலும் இக்கட்டுரை குறிப்பிட்ட ஒரு ஆண்டெல்லையை வகுத்துக்கொண்டு தாக்கங்களை மதிப்பிடவில்லை. ஆனால், அண்மைக்காலப் புள்ளிவிபரங்கள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தாக்கப் பகுதிகளையும் தாக்கப் போக்குக்களையும் விளக்குகின்றது. மேலும் பொருளாதார வளர்ச்சிவீதப்போக்குகளை மட்டும் கொண்டு தாக்க விளைவைக் கூறுவது ஒரு பருமட்டான நோக்கே. இத்தன்மையானது பொருளாதாரத்தின் துறைரீதியான நோக்கினை அவசியப்படுத்துகிறது. இந்தவகையில் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய துறைகளான; இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான நெல் மற்றும் உப உணவுப் பொருட்களான மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கரும்பு முதலியவற்றை உள்ளடக்கிய விவசாயத்துறை, மீன்பிடி- கால்நடைத்துறை, கைத்தொழிற்றுறை, சக்தித்துறை முதலியன கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதவிர, வெளிநாட்டுத் தனியார் முதலீட்டுத் துறை, பாதுகாப்பு வரவு- செலவுத் திட்டம் முதலியவற்றிலான தாக்கங்களும் காட்டப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி நடுநிலைமையான எதிர்கால ஆய்வுகள் வேண்டிநிற்கின்றன. மொத்தத்தில் இது அப்படியான எதிர்கால ஆய்வுகளுக்கான ஒரு முன்னுரையாக அமையட்டும்.

ஜோ. பேரின்பராஜா

## விவசாயத்துறை

இலங்கைப் பொருளாதாரத்தில் இன்றும் விவசாயத்துறையே முன்னணித்துறையாகவுள்ளது. 1991ம் ஆண்டில் தேயிலை, இறப்பர், தென்னை (பெருந்தோட்டப்பயிர்கள் அல்லது பிரதான ஏற்றுமதிப் பயிர்கள்) நெல் சிறு ஏற்றுமதிப் பொருட்கள், சீனி (கரும்பு) உப உணவுப் பொருட்கள் முதலியவற்றை உள்ளிட்ட விவசாயத்துறையானது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 19.8% மாக இருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் உள்நாட்டுப் போரின் தீவிரமும், பாதகமான காலநிலையுமே குறிப்பிட்ட பயிர்களின் உற்பத்திவீழ்ச்சிக்குக் காரணமாகும்(3 குறிப்பாக நெல், சீனி, தெங்கு, மிளகாய், சின்னவெங்காயம்முதலியனவே பாதகமான உற்பத்திப் போக்கைக் காட்டின.

### நெல்

இலங்கையின் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத்திணைக்களத்தின் தரவுகளின் படி 1991 இல் 2.39 மில்லியன் மெற்றிக் தொன்னாகவிருந்த (114 மில்லியன் புசல்கள்) நாட்டின் மொத்த நெல் உற்பத்தியினை 1990 இல்

உற்பத்தியான 2.53 மில்லியன் மெற்றிக் தொன்னோடு (121 மில்லியன் புசல்கள்) ஒப்பிடுகின்றபொழுது 6% ஆல் குறைவடைந்தது. பெரும்போகம் (Maha 1990-91) சிறுபோகம் (Yala 1990-91) ஆகிய இரு போகங்களிலும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. வடக்குக் கிழக்குப் போரின் உக்கிரத்தினால் நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவும், அறுவடை செய்யப்பட்ட நிலத்தின் அளவும் குறைவடைந்ததே உற்பத்திவீழ்ச்சிக்குக் காரணமாகும்.

போர்த்தாக்க விளைவுவீதத்தினை மேலும் மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து உள்நாட்டுப்போர் நெல் உற்பத்தியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது தெளிவு. எனினும் தாக்கவீதத்தின் அளவினை மதிப்பிடுவது சற்றுச் சிரமமானதாகவுள்ளது. உற்பத்தி மீதான காலநிலையின் தாக்கமும், போரின் தாக்கமும் இணைந்து ஒன்றாக மத்திய வங்கி அறிக்கையில் காட்டப்பட்டுள்ளதுதான் இதற்குக் காரணமாகும். உதாரணமாக 1990 இல் ஒப்பீட்டுரீதியான மொத்த நெல் உற்பத்திவீழ்ச்சி 6% மாகும்(4. இந்தக் குறைப்பிற்கு உள்நாட்டுப்போரும் பாதகமான காலநிலையுமே காரணமாகும். சாதகமான

**1990 இல் அதற்கு முந்திய ஆண்டோடு ஒப்பிடுகின்றபோது மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களின் வளர்ச்சி வீதங்கள் முறையே 32% மாகவும் 47% மாகவும் இருந்தன. அதேவேளை இதே காலப்பகுதியில் பொலநறுவை மாவட்டம் 92% வளர்ச்சிவீதத்தையும் மகாவலி "H" பகுதி 80% வளர்ச்சிவீதத் தையும் காட்டின.**

தெளிவுபடுத்தும் ஓர் ஆண்டாக 1989 ஆம் ஆண்டு காணப்பட்டது. இந்த ஆண்டின் மொத்த நெல் உற்பத்தி 1988 இல் அடையப்பெற்ற 16% உற்பத்தி அதிகரிப்பிற்கு மாறாக 17% ஆல் வீழ்ச்சியடைந்தது. இது 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடையப்பெற்ற உற்பத்திகளுள் மிகவும் குறைவானதாகும் (99 மில்லியன் புசல்கள்) என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு உற்பத்தியானது எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 70% இனை மட்டுமே பூர்த்தி செய்தது. முக்கிய நெல் விளைபிரதேசங்களில் நிலவிய பாதகமான காலநிலையும் போரும்தான் இதற்குக் காரணமாக இருந்தது என மத்தியவங்கி கூறுகின்றது.

காலநிலை நிலவியதும் அதேவேளை உள்நாட்டுப்போர் உக்கிரமடைந்த சில ஆண்டுகள் இருக்குமாயின் மிகவும் இலகுவாக இந்தப் போர்த் தாக்க விளைவுவீதத்தினைக் கணித்துவிடலாம். இப்படியான இரு பண்புகளையும் கொண்ட ஆண்டுகளைக் கண்டுபிடிப்பதனைத் தற்போது கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவுகள், தகவல்கள் எல்லைப்படுத்திவிடுகின்றனவேயொழிய அது முடியாததொன்று என்பதல்ல. 1990 ஆம் ஆண்டில் நிலவிய சாதகமான காலநிலையினாலும் உள்நாட்டுப்போரின் தீவிரம் சற்றுக் குறைந்தும் காணப்பட்டதனால் நெல் உற்பத்தி 23% ஆல் உயர்ந்தது என மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. ஆனால் இந்த ஆண்டில்

(1990 ஆனியில்) மீண்டும் மட்டக்களப்பில் ஆரம்பித்த உள் நாட்டுப்போர் உச்சக்கட்டத்தை அடைந்தது என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும். எனவே இதிலிருந்து 1990 ஆம் ஆண்டு உள் நாட்டுப்போர் உக்கிரமடைந்தும் அதேவேளை சாதகமான காலநிலை நிலவியதுமான ஓர் ஆண்டு என்ற முடிவிற்கு வரலாம். இந்த ஆண்டு வடக்குக் கிழக்கு (அம்பாறை மாவட்டம் தவிர்ந்த) பிரதேச நெல் உற்பத்தி 12% ஆல் அதிகரித்தது. அதேவேளை இதே காலப்பகுதியில் நாட்டின் ஏனைய பிரதேசங்களின் உற்பத்தி அதிகரிப்பு வீதம் 88% ஆகவும் காணப்பட்டது. எனவே இங்கு காணப்படும் வித்தியாசம் போர்த் தாக்க விளைவுவீதமாகவே இருக்கவேண்டும்.

மேலும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் முக்கிய நெல் விளைபிரதேசங்களின் உற்பத்தி வளர்ச்சிவீதங்களை நாட்டின் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களின் வளர்ச்சி வீதங்களோடு ஒப்பிடுவதன் மூலமும் போர்த்தாக்கவிளைவுவீதத்தினை விளங்கிக்கொள்ளலாம். உதாரணமாக 1990 இல் அதற்கு முந்திய ஆண்டோடு ஒப்பிடுகின்றபோது மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களின் வளர்ச்சி வீதங்கள் முறையே 32% மாகவும் 47% மாகவும் இருந்தன. அதேவேளை இதே காலப்பகுதியில் பொலநறுவை மாவட்டம் 92% வளர்ச்சிவீதத்தையும் மகாவலி "H" பகுதி 80% வளர்ச்சிவீதத்தையும் காட்டின.

நெல் உற்பத்திக் குறைப்பானது உள்நாட்டு அரிசித்தேவையினை நேரடியாகப் பாதிக்கின்றது. 1988 ஆம் ஆண்டில் உள்நாட்டின் மொத்த அரிசித் தேவையில் உள்நாட்டு உறபத்தியின் பங்கு 88% இருந்தது. இது 1989 இல் வீழ்ச்சியடைந்து 73%மாகக் காணப்பட்டது. இதனால் அரசு அரிசி இறக்குமதியினைச் செய்யவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டது.

நெல் உற்பத்திக் குறைப்பானது இலங்கையின், குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் கிராமிய வறுமை வட்டத்தை மேலும் அதிகரிக்கின்றது. அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் தொகையை அதிகரிக்கப்படுகிறது. உள்நாட்டுப்போர் நெல் பயிரிடப்படும், அறுவடை செய்யப்படும் பரப்பளவை குறைக்கின்றது. இதனால் உற்பத்தி குறைவடைகின்றது குறைந்தளவு உற்பத்தி, சந்தைப்படுத்தலில் ஏற்கனவேயுள்ள பிரச்சனைகளுடன் சேர்ந்து

**உள்நாட்டுக் குழப்பம் காரணமான சாதாரண வேலைத்திட்ட நடவடிக்கைகள் குறைந்ததும் தொழிலாளர் பற்றாக் குறையுமே செவனகல பெல்வத்தை தொழிற்சாலைகளினதும் அறுவடைசெய் நிலப்பரப்பு, சராசரி விளைவுக் குறைப்புக்கள் மூலம் சீனி உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்தது**

(நெற்சந்தைப்படுத்தும் சபை இயங்காமை) கிராமிய விவசாயிகளின் வருமானத்தைக் குறைக்கின்றது. குறைவடைந்த வருமானம், அரசின் பொருளாதாரத்தடை காரணமான உயர்ந்த விலையான பொருட்களை கொள்வனவு செய்யமுடியாமல் உள்ளது. அதாவது அவர்களின் உண்மை வருமானம் குறைக்கப்பட்டு வறுமை என்ற நிரந்தர "நச்சுச்சுழலுக்குள்" (vicious circle) அவர்களைச் சிக்கவைக்கின்றது. குறுநிலப்பிரபுக்களுக்குக் கீழ் வேலைசெய்யும் அசல் பாட்டாளிகள், நாட்கூலிகள், சிறு விவசாயிகள் முதலியோரை உள்ளடக்கிய இலங்கையின் விவசாயச் சமூகமே மிகக் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகின்றது(5

## கரும்பு

கரும்புச் செய்கையும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்படுகின்ற ஒரு துறையாக இருந்துவருகின்றது. வேலை இடைநிறுத்தங்களை, வேலை நேரக்குறைப்பு, வெளிப்பகுதிகளில் இருந்துவரும் பருவகால அறுவடைத் தொழிலாளர்களின் வரத்துக்குறைவு, பயிரிடு நிலப்பகுதிகள் கைவிடப்படல் முதலியனவே இத்துறையின் போர்த்தாக்கங்களாக உணரப்பட்டன. மேலும் ஒரு சுவாரஸ்யமான பாதிப்பும் உணரப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசு பொதுமக்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பறித்துவிட்டதனால் கரும்புத்தோட்டங்களை காட்டு யானைகளின் அழிவிலிருந்து பாதுகாக்க கரும்புச் செய்கையாளர்களால் முடியவில்லை. இதுவும் இத்துறையின் குறிப்பிடத்தக்க உற்பத்திக் குறைப்பிற்குக் காரணமாக இருந்தது.

இங்குராண, கந்தளாய், செவனகல, பெல்வத்தை ஆகிய நான்கு சீனி உற்பத்தித் தொழிற்சாலைகளே இலங்கையில் காணப்படுகின்றன. இவற்றுள் இங்குராண, கந்தளாய் சீனித் தொழிற்சாலைகள் கிழக்கு மாகாணத்தில் இட அமைவுபெற்றுள்ளன. இதனால் உள்நாட்டுப்போர்நிலைமாற்றம் உற்பத்தியைப் பாதிக்கின்றது. போர்நிலை செவனகல, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளின் உற்பத்திக் குறைப்பிற்கும் காரணமாக இருந்தது. 1989 இல் செவனகலையின் சீனி உற்பத்தி 18% ஆலும் பெல்வத்தையின் சீனி உற்பத்தி 5% இனாலும் வீழ்ச்சிகண்டது. உள்நாட்டுக் குழப்பம் காரணமான சாதாரண வேலைத்திட்ட நடவடிக்கைகள் குறைந்ததும் தொழிலாளர் பற்றாக் குறையுமே இந்த இரண்டு தொழிற்சாலைகளினதும் அறுவடைசெய் நிலப்பரப்பு, சராசரி விளைவுக் குறைப்புக்கள் மூலம் சீனி உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்தது(6.

## உப உணவுப் பொருட்கள்

உப உணவுப் பொருட்களான மிளகாய், சின்னவெங்காயம், உருளைக் கிழங்கு முதலியனவும் போர்த்தாக்க விளைவுகளைக் காட்டின. மேற்குறிப்பிட்டவை உயர் பெறுமதிகொண்டவை எனபது குறிப்பிடத்தக்கது. சராசரி விளைச்சல், பயிர்ச்செய்கையின் கீழுள்ள பரப்பளவு குறைப்புக்களே மிளகாய் உற்பத்தியின் வீழ்ச்சிக்கும் காரணமாய் இருந்தது. மேலும் சராசரி வருடாந்த விளைச்சல் வீதம் அதிகரித்தும் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட பாரிய குறைப்பினால் சின்ன வெங்காய உற்பத்தி வீழ்ச்சிகண்டது. வட- கிழக்கு மாகாணப் போர் உக்கிரத்தன்மையினால் விதை வெங்காயத்திற்கு ஏற்பட்ட குறைப்பே இதற்குக் காரணமாகும் என இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (1991) கூறுகிறது. இதன்விளைவாக நாட்டுமக்களின் வெங்காயத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக 1991 ஆம் ஆண்டு கூட்டுமொத்த விற்பனவு ஸ்தாபனம் (CWE) சின்னவெங்காயத்திற்குப் பிரதியீட்டுப்பொருளான 48, 689 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தினை இறக்குமதி செய்தது. இது இதற்கு முன்னைய ஆண்டிலும் பார்க்க 55% ஆல் அதிகமானதாகும்

மேலும் பச்சை மிளகாய் உற்பத்திக்குறைப்பு செத்தல்மிளகாய் உற்பத்தியை நேரடியாகப் பாதித்தது. உற்பத்திக்குறைவை ஈடுசெய்ய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 8350 மெற்றிக் தொன் செத்தல் மிளகாயினை இறக்குமதி செய்தது. இது மொத்த இறக்குமதிச் செலவீட்டினை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தைத் தாக்குகின்றது.

## மீன்பிடி கால்நடைத்துறை

மீன்பிடிக் கால்நடை உற்பத்தித் துறையானது விவசாயத் துறையின் ஓர் உபதுறையாக தொடர்ந்து இடம்பெற்றுவருகிறது. இத்துறையின் முக்கியத்துவம் காரணமாக இது தனித்துறை என்ற அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டு தனியாக இங்கு ஆராயப்படுகிறது.

இத்துறையும் உள்நாட்டுப்போரினால் குறிப்பிடத்தக்க பாதிப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. மேலும் இத்துறை கரையோர மீன்பிடி, உள்நாட்டு மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி ஆகிய மூன்று உபதுறைகளை உள்ளடக்கியுள்ளது. இதில் தொடர்ந்தும் கரையோர மீன்பிடியே மொத்த மீன்பிடி உற்பத்தியில் 80% மாயுள்ளது. இரண்டாவது இடத்தினை 12% மொத்த உற்பத்திப் பங்களிப்பைக்கொண்ட உள்நாட்டு மீன்பிடித்துறையாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் மிகக்கூடுதலான கரையோரங்களைக்

கொண்டிருப்பதால் போர்த் தாக்க விளைவு அதிகமாயுள்ளது.

1989 ஆம் ஆண்டில் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஒரு மீட்சிப் போக்கு அவதானிக்கப்பட்ட போதிலும் பல்வேறுபட்ட மீன்பிடி நடவடிக்கைகளையும், பல மீன்பிடித் திட்டங்களையும் (project) இந்த ஆண்டு முழுவதும் நிலவிய போரின் உக்கிரம் படுமோசமாகப் பாதித்தது. அத்தோடு இப்பிரதேசத்தின் மூன்று நன்னீர் மீன் வளர்ப்பு நிலையங்களுக்குத் தேவையான மீன் உணவுகளை எடுத்துச் செல்ல முடியாமையினால் அவை கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதற்குக் காரணம் இலங்கையின் பாதுகாப்புப் படையினர் நன்னீர் மீன்வளர்ப்பு நிலையங்களுக்குச் சொந்தமான வாகனங்களை எடுத்துச் சென்றமையினால் ஏற்பட்ட போக்குவரத்துப் பிரச்சனையே.

1990 இன் ஒப்பீட்டு ரீதியான மீன்பிடி 12% ஆல் குறைந்தது. இதே ஆண்டில் 92% பங்களிப்பினைக் கொண்ட கரையோரமீன்பிடியின் உற்பத்திவீழ்ச்சி 15%மாக இருந்தது. மேலும் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட கிழக்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் பாதிப்படைந்தது. அதேவேளை மேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் 1990ம் ஆண்டிற்குள் தன்னை வெற்றிகரமாக நுழைத்துக் கொண்டது.

கால்நடைத் துறை கிராமிய விவசாயத்தில் மிக முக்கியமானதோர் அங்கம். நெல் உற்பத்தி வீழ்ச்சி அடையும் காலங்களின் சிறு விவசாயிகளின் பொருளாதாரப் பிரச்சனையின் தீவிரத்தைக் குறைக்கும் ஒரு மாற்றீட்டுத் துறையாக இது காணப்படுகிறது. போர்நடவடிக்கைகள் மேய்ச்சல் நிலத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. காட்டுப் பிரதேசங்களை அண்டிய பிரதேசங்களில் சில குறிப்பிட்ட காலப் போர் நடவடிக்கைகள் தீவிரமாக இருந்தமை, ஊரடங்கு உத்தரவுமூலம் தூர இடங்களுக்கு மேய்ச்சலுக்காக மந்தைகளைக் கொண்டுசெல்லமுடியாதிருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

குறிப்பாகக் கிழக்குமாகாணத்தில் காலத்திற்குக் காலம் மந்தைகளை (முக்கியமாக மாடுகள்) மேய்ச்சலுக்காகத் தூ இடங்களுக்குக் கொண்டுசெல்வது ஒரு வழக்கம். இந்த மந்தைச் சுற்றுலா தற்பொழுது பெரும்பாலும் அருகிவிட்ட நிலைதான் காணப்படுகின்றது. மேலும் மந்தைச் சொந்தக்காரர்கள் போரின் தாக்கத்தினால் அடிக்கடி இடம் விட்டு இடம் நகரவேண்டியுள்ளது. இதனால் அவர்களின் மந்தைகளுக்குப் போதிய உணவினைக் (புல்) கொடுக்கமுடியாமையினால் பாலுற்பத்தி வீழ்ச்சியடைந்துவிடுகிறது. கிராமிய மக்களின் (பிழைப்பூதிய மட்டத்தில் வாழும்) முக்கிய வருமான மூலமான இந்தக் கால் நடைத்துறையினைப் பாதித்து அவர்களின் கிராமிய வறுமைக்கு வழிவகுக்கின்றது. அத்தோடு நாட்டின் பால், பாற்பொருட்களின் உற்பத்திக் குறைப்பு இறக்குமதியை அதிகரிக்கின்றது. 1990 இல் 2337 மில்லியன் ரூபாவாக இருந்த இவற்றின் இறக்குமதிச் செலவீடு 1991 இல் 14% ஆல் அதிகரித்து 2796 மில்லியன் ரூபாயாகக் காணப்பட்டது.

## கைத்தொழிற்துறை

கைத்தொழிற் துறையே இலங்கைப் பொருளாதாரத்தின் இரண்டாவது முக்கிய துறையாக உள்ளது. மொத்த தேசிய வருமானத்தில் இதன் பங்கு 1991 இல் 18% இருந்தது. இலங்கையின் முன்னணித் துறையான விவசாயத்துறையை எட்டிப்பிடிக்க இன்னும் கைத்தொழிற்துறையானது 2% வளர்ச்சியினை மட்டுமே அடையவேண்டியுள்ளது. இவ்வாறு கைத்தொழிற்துறையின் பங்கு அதிகரித்தும் விவசாயத்துறையின் பங்கு குறைந்துகொண்டு வருவது "அமைப்பு ரீதியான மாற்றம்" (structural adjustment) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு ஆழமான ஆய்வுகளை வேண்டிநிற்பதாலும் எமது தற்போதைய நோக்குக்கு அது அப்பாற்பட்டாலும் இது தொடர்பான விளக்கங்கள் இடைநிறுத்தப்படுகிறது.

கைத்தொழிற் துறையிலும் உள்நாட்டுப் போர்த்தாக்க விளைவுகளை அவதானிக்கலாம். உதாரணமாக தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், சீனிக் கூட்டுத்தாபனம், இலங்கைத் தாதுப்பொருட் கூட்டுத்தாபனம், சீமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் முதலிய அரச கூட்டுத்தாபனங்களே பாதிப்புக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன.

ஆனையிறவு, புததளம் ஆகிய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள உப்புக் கூட்டுத்தாபனங்கள் போரின் தாக்கங்களுக்கு உட்பட்டன. 1990 இல் கைத்தொழிற்துறையின் மொத்த வீழ்ச்சிக்கு வழிவகுத்த கூட்டுத்தாபனங்களுள் ஒன்றாக இலங்கையின் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் அடையாளம் காணப்பட்டது. குறிப்பாக, வடகிழக்குப் போர் நிலைமைகளின் தீவிரத்தால் 1991 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி 65% ஆல் வீழ்ச்சிகண்டமை குறிப்பிடத்தக்கது. 1991 இல் வீழ்ச்சி வீதம் 17% ஆக இருந்தது.

1991 இல் கந்தளாய், இங்குராண, செவனகல ஆகிய தொழிற்சாலைகளின் குறைவான சீனி உற்பத்திக்கு(7 குறைவான கரும்பு உற்பத்தியே காரணமாகும். இவ்வாண்டில் உற்பத்திக்குறைப்பு 15% ஆக இருந்தது. இலங்கைத் தாதுப்

பொருட்கள் கூட்டுத்தாபனமும் போரின் தாக்கங்களுக்கு உட்பட்டது. 1991 இல் மின்சார இடைநிறுத்தமும், தாதுப் பொருட்களின் அகழ்வுப் பிரதேசங்களில் நிலவிய (புல்மோட்டை) போர்த் தீவிரமும் இக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியைக் குறைப்பதற்குப் பொறுப்பாயிருந்தன. உற்பத்தி வீழ்ச்சிப் பதிவு ஒப்பீட்டு ரீதியில் 12% ஆக இருந்தது. இது 1990 இல் 35% ஆல் வீழ்ச்சி கண்டது. இதனால் இது இவ்வாண்டின் மொத்தக் கைத்தொழில் துறையினை கடுமையாகப் பாதித்த அரச கூட்டுத்தாபனம் என்ற அந்தஸ்தைப் பெற்றது.

மேற்குறிப்பிடவாறு உள்நாட்டுப்போர் கைத்தொழிற்துயில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆக இருந்தது. நடைமுறை ஆண்டின் (1992) மொத்தப் பாதுகாப்புச்செலவினம் 20.5(8 மில்லியன் ரூபாவாக அதியுயர் கட்டத்தை அடைந்துள்ளது. ஏற்கனவே உள்ள அரசின் பிரச்சனையுடன் சேர்ந்து புலிகளின் தாக்குதல்கள் பொருளாதாரத்தைச் சீரழிக்கின்றது (9.

நடைமுறைச்செலவில் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவேண்டுமென்பது சர்வதேச நாணய நிதி முக்கிய வலியுறுத்துகின்றது(10. சர்வதேச நாணய நிதி இதனை இலங்கை அரசிற்கு கடந்த காலங்களில் அடிக்கடி கூறிவந்துள்ளது. மிக அண்மையில் இதனை சர்வதேச நாணய நிதியின் (IMF) கொழும்புப் பிரதிநிதி மூலம் அரசிற்குத் தெரிவித்துள்ளனா(11. இது போர்த்தாக்கவிளைவு இலங்கைப் பொருளாதார நெருக்கடியினை மீண்டும் கூர்மைப்படுத்தியுள்ளதென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

**நடைமுறை ஆண்டின் (1992) மொத்தப் பாதுகாப்புச்செலவினம் 20.5 மில்லியன் ரூபாவாக அதியுயர் கட்டத்தை அடைந்துள்ளது. ஏற்கனவே உள்ள அரசின் பிரச்சனையுடன் சேர்ந்து புலிகளின் தாக்குதல்கள் பொருளாதாரத்தைச் சீரழிக்கின்றது**

## அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவினம்.

அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவினம் ஓர் வெளிப்படையான போர்த்தாக்க விளைவாகும். ஆயுதக் கொள்வனவு, பாதிக்கப்பட்ட அரச பாதுகாப்புப்படையினாின் புனர்வாழ்வுநிதி ஒதுக்கீடு, வழங்கப்படும் சம்பளம் முதலியவற்றின் பாரிய அதிகரிப்பினால் பாதுகாப்புக்கான வரவு செலவுத் திட்டத்தை அதிகரிக்கின்றது. இதுவே அதிகரித்துவரும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாகும். 1991 இல் பாதுகாப்புச் செலவினம் 19.8 பில்லியன் ரூபாவாக இருந்தது. இதே ஆண்டின் மொத்த வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையான 35.4 பில்லியன் ரூபாவில் இதன் பங்கு கிட்டத்தட்ட 56%

புதுப்பிக்கப்பட்ட அமைப்புரீதியான சீராக்கக் கொள்கையின் கீழ் சர்வதேச நாணய நிதி கடந்த செப்ரம்பரில் (1990) இலங்கைக்கு 456 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதென ஒத்துக்கொண்டது. இதன் முதற்கட்டத் தொகையான 76 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செப்ரம்பர் நடுப்பகுதியில் வழங்கப்பட்டது. மார்ச் (1991) நடுப்பகுதியில் வரவேண்டிய அடுத்த கட்டத் தொகையான 76 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடுக்கப்படவில்லை இதற்கு பாதுகாப்பு வரவு செலவுத்திட்ட உயர்வே காரணமாகும். இதனால் 1992 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டப்

பற்றாக்குறை மேலும் 6 பில்லியன் ரூபாவால் அதிகரித்தது(12. இதுவே இன்றைய அரசு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாகும்.

## சக்தித் துறை

சக்தித் துறை இலங்கை போன்ற ஒரு வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தில் மிக முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. நாட்டின் மொத்த சக்திக்கேள்வியில் (71% இனை வர்த்தகரீதியற்ற சக்தித்துறையும் (*non -commercial energy sector*) மீதி 29% இனை வர்த்தக ரீதியான சக்தித்துறையும் (*commercial energy sector*) பூர்த்தி செய்கின்றது.

வர்த்தக ரீதியிலான சக்தித் துறையானது மின்சாரம், பெற்றோலியம், சிறு அளவிலான நிலக்கரி முதலியவற்றை உள்ளடக்கியுள்ளது. பெற்றோலியம் அடியோடு இலங்கையில் இல்லாததனால் இதன் கேள்வி முழுவதும் இறக்குமதிமூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. இது பெற்றோலியத்தின் பாரிய அளவிலான தங்கியிருப்பு (*oil dependence*) நிலைக்கு வழிவகுக்கிறது. பெற்றோலிய பதனிடும் தொழிற்சாலை மட்டுமே இலங்கையில் உள்ளது. எனவே இலங்கையில் காணப்படுகின்ற ஒரேயொரு சுய வர்த்தக ரீதியான சக்தித்துறையாக மின்சாரத்துறை காணப்படுகிறது. இது உள்நாட்டுக் காலநிலையில் (*weather dependence*) தங்கியுள்ளது. மொத்த வர்த்தக ரீதியிலான சக்தித் துறையில் இத் துறையானது 47 வீதத்தினைப் பூர்த்தி செய்கின்றது. மிகுதித் தேவையை நிலக்கரி, பெற்றோலியம், LGP gas முதலியன பூர்த்தி செய்கின்றன.

தொடரும் உள்நாட்டுப் போர் மின்சாரத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மின்மாற்றி (*transformers*) மாற்றீட்டுத் தொடர்புகள் (*transmissin lines*) ஆகியவற்றுக்கு 1989ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் உண்டாயின. இதனால் இந்த ஆண்டின் மின்சார இழப்பு 500 கிலோவாற்று/மணித்தியாலங்களால் அதிகரித்தது. மேலும் இலங்கை மின்சாரசபைக்கு வருமான, மூலதன இழப்புக்கள் ஏற்பட்டன. 1989 இல் இலங்கை மின்சாரசபையின் மூலதன இழப்பு 39 மில்லியன் ரூபாவாகவும் வருமான இழப்பு 75 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மொத்த சக்தித் தேவையில் 71% (13 இனை பூர்த்தி செய்கின்ற சக்தித் துறையானது விறகு, தென்னைப் பொருட்கள் மறறும் விவசாயத்தை (உமி) அடிப்படையாகக் கொண்ட எரிபொருட்களை உள்ளடக்குகின்றது. இத்துறையானது வடக்குக் கிழக்குப் பகுதிகளின் சக்திவழங்கலில் முக்கியத்துவம் பெறுகின்றது. எதிர்கால வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. அதிகரித்த பெற்றோலிய இறக்குமதிச் செலவினம், இன்னும் நாட்டின் மொத்த சனத்தொகையில் 75% ஆனோர் இலங்கையின் கிராமியப்பகுதிகளில் வாழ்தல், உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு அதிகமாக இருத்தல், இதனை அடிப்படையான கைத்தொழில் உருவாக்கம்



முதலியனவே இத்துறையின் முக்கியத்துவத்திற்குக் காரணமாகும். இந்தத்துறையில் இன்று முன்னணிவகிப்பது விறகே ஆகும். இதன் பங்கு நாட்டின் மொத்த சக்திக் கேள்வியில் 47% ஆனதாக இருந்துள்ளது. எனவே விறகு இலங்கையின் கிராமியத்துறையில் எதிர்காலத்திலும் முன்னணி வகிக்கும் (14.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணப்படும் போர்நிலைகள் இத்துறையின் எதிர்கால வாய்ப்புக்களை அழிக்கின்றன. எதிர்காலத்தில் இப் பிரதேசத்தின் சக்தித்துறையின் முதுகெலும்பாக இத்துறையை வளர்க்க முடியும்.

## வெளிநாட்டுத் தனியார் முதலீடு

இன்றைய இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிநாட்டுத் தனியார் முதலீடு மிக முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றது. குறிப்பாக 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய அரசின் திறந்த பொருளாதாரக்கொள்கையானது சர்வதேச நிதி நிறுவனங்களான சர்வதேச நாணய நிதி (IMF) உலகவங்கி (WB)ஆகிய இரண்டினதும் தீவிர தலையீட்டினை அனுமதித்துள்ளது (W. D. Lakshman 1984). இத்தலையீடு நிரந்தரமாக்கப்பட்ட ஒரு தன்மையினை தற்பொழுது அவதானிக்கலாம். இந்தப் "புதிய எஜமானர்கள்"(15 (New Masters) வெளிநாட்டுத் தனியார் முதலீட்டின் ஊக்குவிப்பில் கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

பொதுவாக உள்நாட்டு அரசியல் உறுதியின்மை வளர்ச்சியடைந்துவரும் நாடுகளை நோக்கிய வெளிநாட்டுத் தனியார் முதலீட்டின் உள்வரவினைக் குறைக்கும்(16. மேலும் இலங்கையின் உள்நாட்டுப்போர் நிலைமைகள் முதலீட்டு உள்வரவினைக் குறைப்பதில் பொறுப்பாயிருந்துள்ளது (Lee Ann Ross and Tilak Samaranayake, 1986). வெளிநாட்டுத் தனியார் முதலீட்டின் மேலான உள்நாட்டுப்போரின் தாக்கப்போக்கினை மதிப்பிடுவதற்கு இரண்டு வகையான நோக்கு அவசியமாகும்.

(1) உள்நாட்டுப்போர் தீவிரமடைந்த காலங்களின் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டில் ஏற்பட்ட சடுதியான குறைப்பு.

(2) ஒப்பீட்டு ரீதியான வெளிநாட்டுத் தனியார் முதலீட்டின் உள்வரவு வீதத்தின் குறைந்து செல்லும் வளர்ச்சி வீதம்.

வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு (FIAC) இனால் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களின் தொகை 1983 இல் 56 ஆகவும் 1984 இல் 35 ஆகவும் 1985 இல் 30 ஆகவும் குறைந்தது மேலும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் (GCEC). 1982 இல் செய்யப்பட்ட புதிய முதலீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 16 ஆகும். இது 1983 இல் 13 ஆக வீழ்ச்சியடைந்தது. எனினும்1984 புதிய முதலீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை (புறக்கணிக்கத்தக்க அதிகரிப்பான) 15 ஆன ஒரு எல்லை அதிகரிப்பைக் காட்டியது. பின்னர் 13 ஆகக் குறைவடைந்தது(17. குறிப்பாக மேற் காட்டப்பட்ட தரவுகள் 1983 ஆம் ஆண்டினை மையமாகக் கொண்டுள்ளதனால் இதனை நாம் உள்நாட்டுப்போர் தீவிரமடைந்த காலங்களில் வெளிநாட்டு முதலீட்டில் ஏற்படும் குறைப்புக்கு உதாரணமாகக் காட்டலாம்.

1989 இல் புதிதாக அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 86 ஆகும். இதில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினாலும் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவினாலும் அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டுத்திட்டங்கள் முறையே 24 ஆகவும் 62 ஆகவும் காணப்பட்டன.

பின்னர்1990 இல் (வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்காக இநத ஆண்டில் கொ. பொ. ஆ குழுவும்) வெ. மு. ஆ குழுவும் ஒன்றாக இணைக்கப்பட்டது. கடுமையான குறைப்பான 30 ஆகக் காணப்பட்டு 1991 இல் மீண்டும் 74 ஆக அதிகரித்தது(18. இவ்வாறு 1990 ஆம் ஆண்டின் சடுதியான குறைப்புக்கு அதேயாண்டு உக்கிரமடைந்த (June 11, 1990) உள்நாட்டுப்போர் காரணமானதாக இருக்கவேண்டும். அக்காலத்தில் நிலவிய உலகப்பொருளாதார மந்தம், (இன்றும் மந்தச்சேற்றில் தான் உலகப்பொருளாதாரம் புதையுண்டுள்ளது.). வளைகுடாப் போர் முதலியவற்றைக் காரணம காட்டுவதன் மூலம் வெளிநாட்டு முதலீடு மீதான உள்நாட்டுப்போரின் தாக்கத்தைப் புறக்கணித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும். உண்மையில் வளைகுடாப் போரும் உலகப் பொருளாதார மாற்றமும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பது அங்கீகரிக்கப்படுவதுபோல் உள்நாட்டுப்போர்த்தாக்க விளைவும் அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதே இங்கு வாதமாகும்.

1988 ஆம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டு முதலீட்டுத் தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் அவர்களின் கூற்றினை இங்கு மேற்கோள் காட்டுவது மிகவும் பொருத்தமாயுள்ளது. "பரந்த அளவிலான திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கவர்ச்சிகரமான

முதலீட்டு ஊக்குவிப்புக்களை வழங்கியும் எதிர்பார்த்த அளவிலான வெளிநாட்டுத் தனியார் முதலீடு வராமைக்கு முக்கிய காரணம் கடநத நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாக நாடடைப் பாதித்த இனப்பிரச்சனைதான்"(19

உலகின் எல்லா நாடுகளிலும் வியாபார நடவடிக்கைகயினைச் செய்யமுடியாதுள்ளது. பல நாடுகளில் நிலவும் எதிர்கால நிச்சயமற்ற தன்மையும் அது தொடர்பான ஆபத்தும் (Business risk) காணப்படுகிறது. இவ்வாறு உலகில் வியாபார ஆபத்துக் காணப்படும் நாடுகளுள் இலங்கை ஏழாவது இடத்தினை வகிக்கின்றது(20. இந்த வியாபார ஆபத்துத் தன்மையானது முதலீட்டாளர்களின் வியாபார நம்பிக்கையினை (Business confidence) இழக்கச் செய்வதன்மூலம் இலங்கையின் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டைக் குறைத்துள்ளது(21).

மேற்குறிப்பிட்ட துறைகளைவிட ஒன்றிணைக்கபபடட கிராமிய அபிவிருத்தித் திட்டம், வங்கியியல், கல்வி, போக்குவரத்து, உள்நாட்டுவர்த்தகம் முதலிய பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலும் உள்நாட்டுப்போரின் தாக்கவிளைவு வீதத்தை நாம் அவதானிக்கலாம். அவறறை உள்ளடக்கல் ஆய்வினை நீட்டிவிடும் என்பதால் இங்கு அவை தவிர்க்கமுடியாமல் தவிர்க்கப்படுகின்றன.

## முடிவுரை

இதுவரையான ஆய்வானது இலங்கைப் பொருளாதாரத்தின் உள்நாட்டுப் போரினால் ஏற்பட்டுள்ள போர்த்தாக்க விளைவினைத் தெளிவாகக் காட்டியுள்ளது. இத் தாக்கம் பொருளாதாரவளர்ச்சி, மொத்த அபிவிருத்தி இலக்குகள் முதலியவற்றை அடைவதில் காலப் பின்னடைவினை ஏற்படுத்துகின்றது. அடையப்படுகின்ற முன்னேற்றங்கள் கூட நாட்டின் எல்லா மக்களுக்கும் பங்கிடப்படுவதும் இல்லை.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் செலவுகள் சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் உயர்ந்தவை. துரதிர்ஷ்டவசமான மனிதவள இழப்புகள் மட்டுமல்ல; அதைவிட உற்பத்தி, பௌதிகச்சொத்து இழப்புக்கள், அதிகரித்த பாதுகாப்புச் செலவினம் முதலானவையே முக்கியமான பொருளாதாரச் செலவுகளாகும்(22)

தொடரும் அரசின் பொருளாதாரத் தடையினால் மக்கள் கடுமையான பாதிப்புக்குட்படுகின்றனர். எனினும் இது இப்பிரதேசத்தின் சுயதன்முனைப்பான பொருளாதாரமொன்றிற்கு குறிப்பிடத்தக்க உந்துதாக உள்ளது.

எனவே இது உள்நாட்டுப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டியதன் இலங்கையரசின் அவசியத்தின் அவசரத்தினை அதிகரித்துள்ளது. பூரண பொருளாதார முன்னேற்றத்திற்கு இலங்கையின் உள்நாடடுப்போர் தீர்க்கப்படவேண்டியது ஒரு முன்நிபந்தனையாகும். இதனை ஆசிய அபிவிருத்திவங்கியும் தனது அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் (ADB, 1992) வலியுறுத்தியுள்ளது.


1. The Island wednesday 15th of July 1992
2. My Emphasis
3. Central Bank of Sri Lanka, Annual Report 1991
4. cited page 1.
5. Nalin Wijesekara, "Sri Lanka", The Asia & Pacific Review 1990, p.211.
6. Central Bank of Sr Lanka, Annual Report 1989, p44-46.
7. சீனி உற்பத்தி விவசாயத் துறையின் கீழும் எழுதப்பட்டுள்ளதால் இங்கு அளவு வரையறுக்கப்பட்டுள்ளது. மேலதிக விளக்கங்களுக்கு விவசாயத்துறையில் கரும்பு உற்பத்தியைப் பார்க்கவும்.
8. The Island 12th of July 1992
9. The Economist 18 April 1992
10. The World Bank Report on Sri Lankan Economy, 1992
11. The Island, 19th of July 1992.
12. The Economist Intelligent Unit, "Sri Lanka: Country Report", No 2, 1992, the Economist 18th of April 1992.
13. cited p.5
14. Joseph Perinparajah, "The Energy/Environmental Situation in Sri Lanka, paper submitted for M.S.c in Energy Management, at the Norwegian School of Management, 1991.
15. Satchi Ponnambalam, "Dependent Capitalism in Crisis, The Sri Lanka Economy" 1948-1981, 1981 pp 147
16. J.P.Agarwal, "Determinants of foreign direct investment: a survey", Weltvirfschapfliches Archive (Tubigen), Bank 116, 1980 pp 739-773.
17. Data for both the FIAC and the GCEC are taken from the world Bank, Sri Lanka: Current Economic situation and outlook, may 13 1986, p.69
18. Data for both the FIAC and the GCEC are taken from the world Bank, Sri Lanka, Annual Report, 1989, p. 60; Anual Report 1990, p 56, Anual Report 1991, p.62
19. B. Mahadeva, "Bringing in the foreign investors", paper read at the ADB/IFC symposium. DailyNews 09 February.
20. Fortune International, 23 September 1991.
21. Lanka Guardian "world Bank Report, volume 14 nr. 22 March 1992, p.10.
22. World Bank Report, 1992


தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தேசத்தைத் தேடும் மாணவர்கள்



மாணவர்கள் தான் நாம்
ஆனாலும்
மானுட வாழ்வின்
மகத்துவம்
மறுக்கப்பட்டவர்கள்

தேசத்தின் தெருக்களில்
தெரியும் நிகழ்வுகளால்
தினம் தினம்
நாங்கள்
சிதைந்துதான் போகிறோம்
சத்தியமாய்ச் சொல்கிறோம்
நிம்மதியாய் மூச்சுவிட
துண்டு நிலம் கூட
எமக்கில்லை

உறவின் பிரிவொன்றில்
சடலத்தை வைத்து
சடங்குகள் முடித்து
சாம்பல் அள்ளும்
சந்தர்ப்பம் எமக்கில்லை
சந்திரனைப் பற்றிய
சந்தேகம் எமக்கெதற்கு
எமக்கு மேலே
எரிகுண்டு வீசும்
எதிரியின் விமானம்
பதுங்கு குழியை விட்டு
எழுந்து வர
எமக்கு முடியாது
"எக்ஸ்" சக "வை"
எதைக் குறிக்கின்றது
என்பது எமக்கெதற்கு

குடும்பமாய்க் கூடியிருந்து
குறை நிறைகள் பேசிய வீட்டு நிலை
விளங்கப்படுத்த முடியாதவர்கள்
விண்வெளியின் விலாசம்
எமக்கெதற்கு

யுத்த விமானங்களின்
சத்தங்களின் பின்னால்
"நியூட்டனின் விதி"
சரியா பிழையா என
பரிசோதிக்கும்

பைத்தியக்காரரா நாங்கள்
சாவு எம்மைச்
சந்திக்கும் போதும்
சான்றிதழ்களைக்
கைப்பிடிக்கும்
மனநோயாளரா நாங்கள்

இல்லை
முதலில்
மனிதராய் வாழ
முயற்சிகள் செய்வோம்
முடியாவிட்டால்
புரட்சி செய்வோம்

தேசப்படத்தில்
எங்கள் தேசத்தை
தேடிப் பார்ப்போம்
இல்லாவிட்டால்
குருதிமையினால்
குறித்துக் காட்டுவோம்.

அனைவர்க்கும் கிடைக்கும்
சமத்துவ பூமியை
நாங்கள்
சமைப்போம்

பின்னால்
நாங்கள்
காற்றினைக் கூட
எங்கள்
போக்குவரத்துக்கு
ஏற்றதாக்குவோம்

விண்ணினைப் பிளந்து
வீடுகள் கட்டுவோம்
சந்திரனைக் கொண்டுவந்து
சரிபிழை பார்ப்போம்
அதுவரை
எங்கள்
புயங்களிலெல்லாம்
புரட்சி
குடியிருக்கட்டும்.

-பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# வயது
# ஒரு
# வரம்பல்ல

என்னை
பாலகப் போராளியாம்! - சிலர்
பரிகசிக்கிறார்கள்.

தீப் பிழம்புகள் - என்
தேசத்தை எரிப்பதும்;
செல் வீச்சுக்கள்
தேகத்தை சிதைப்பதும்;
பட்டினி மழலைகள்
பாலுக்கழுவதும்;
ஒடுங்கிய குழிக்குள்
ஓடி ஒளிப்பதும்;
இன்னும்
எத்தனை பொழுது.........?
என்னால்......
முடியவில்லையே

இவற்றையெல்லாம்
தேசிய ஒருமைப்பாடாக
சிருஷ்டித்துக் கொள்ள
தெரியவில்லை எனக்கு,
ஜனநாயக மரபென்று
ஜீரணித்துக்கொள்ள-என்
ஜீவனுக்கு ஒப்பவில்லை
ஏதோ ஒரு வித
உறுத்தலை மட்டுமே
உள்ளம் உணர்ந்தது

காலத்திற்குக் காலம்
நாக்கின் கீழ் கத்தியோடு
விடுக்கப்படும்
சமாதான அழைப்புக்களையும்,
குலுக்கிக் கொள்வதற்காய்



நீட்டப்படும் கைகளில்
கொள்ளி இருப்பதையும்
இப்போது
புரிந்து கொள்ள
வயது ஒரு வரம்பாக
தெரியவில்லை எனக்கு.
வல்லூறுக்களையும்
வானம்பாடிகளையும்
பாகுபடுத்திப் பார்க்க- இந்தப்
பருவம் போதும்

இந்தப்
பதினைந்து வயதில்- என்னை
பாதித்தவைகள் ஏராளம்
அதனால்- என்
வயதை விட
அனுபவத்திற்கு
ஆண்டுகள் அதிகம்.

இது!
புரியாத பருவமல்ல
ஒரு வேளை- நான்
சிறிது முன்னாடி
புரிந்து கொண்டு விட்டேனென்பது
உண்மையாக இருக்கலாம்
உடலில் வலு
இருக்கிறதோ இல்லையோ
உள்ளத்தில் அது
நிறையவே இருக்கிறது.


பரிகசிப்பவர்களுக்காக
பரிதாபப்படுகிறேன்!

-சோதியா

Tamileelam Archive

சீச்...சீ... என்னடி இது?

கண்ணீரைத் துடைத்துவிட்டு
காலத்தைப் பிரசவி
தலையைத் தாங்கும் கைகளையுயர்த்தி
நாசத்தைச் சங்கரி



தமிழீழ விடுதலைப் புலிகள்
நோர்வேக் கிளை

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
**Tamil Co-ordinating Committee**
**Post Box 1699 Vika**
**0110 Oslo 1**